இந்த விலைக்கழிவு நாரஹேன்பிட்டி எலைற்ரேடியோ காட்சியறையில் மற்றும் shop.eliteradio.com மூலமான கொள்வனவுகளுக்கு மட்டும் வழங்கப்படும்.
Ceiling
Pedestal
Table
Orbital
Wall
Exhaust
KDK SINCE 1909 JAPAN
அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO Since 1959
facebook.com/kdksrilanka | shop.eliteradio.com
வார நாட்களில: 9:00am - 5:00pm | சனிக்கிழமை: 9:00am - 1:00pm

Follow us:
# தமிழன்
THAMILAN தமிலන්
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
மலர் : 03, இதழ்: 228 சோபகிருது வருடம், சித்திரை மாதம் 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(09.05.2023) ஹிஜ்ரி 1444, ஷவ்வால் - 18, 0115 886187 - பக்கங்கள் 10
விலை ரூ.50

Special offer
2023 மே 1 தொடக்கம் மே 31 வரை
KDK SINCE 1909 JAPAN
DISCOUNT 15% (On selected models only) *Conditions apply
Cash or Card
Ceiling | Pedestal | Table | Orbital | Wall | Exhaust
அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO Since 1959
Inquiries (011) 250 0823 | (011) 236 8472



## மண்சரிவு எச்சரிக்கை நீடிப்பு

நாட்டின் பல பகுதிகளில் நிலவும் கடும் மழை காரணமாக ஐந்து மாவட்டங்களில் உள்ள 16 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

பதுளை மாவட்டத்தில் பசறை பிரதேச செயலகம், காலி மாவட்டத்தில் பத்தேகம, நாகொட, எல்பிட்டிய, யக்கலமுல்ல பிரதேச செயலகப் பிரிவுகள், கேகாலை மாவட்டத்தில் எட்டியந்தோட்டை, ரம்புக்கனை, தெரணியகலை, மாவனல்லை, குருநாகல் மாவட்டத்தில் மாவத்தகம, கலிகமுவ, ரிதிகம பிராந்திய செயலகப் பிரிவுகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. 02 பக்கம்

# ரணில் - சம்பந்தன் விசேட சந்திப்பு!





## தமிழ் எம்.பிமாரும் இன்று பேச்சில் இணைவர்
## முக்கிய விடயங்களை முன்னிறுத்த தீர்மானம்

**நமது அரசியல் செய்தியாளர்**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்குமிடையில் இன்று மாலை ஜனாதிபதி செயலகத்தில் விசேட சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது.

சம்பந்தனுடன் கூட்டமைப்பின் எம்.பிக்களான எம்.ஏ.சுமந்திரன், இரா. சாணக்கியன், கலையரசன்..., 02 பக்கம்

## சீனி, கோதுமை மா விலைகள் அதிகரிப்பு



சீனி மற்றும் கோதுமை மா ஆகியவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அத்தியாவசிய உணவுப்பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஒரு கிலோகிராம் சீனியின் விலை 25 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக... 02 பக்கம்

## வங்கக்கடலில் உருவாகிறது புதிய புயல்

10 பக்கம்

## சிறுவர்களை கடத்தும் நோக்கில் சந்தேகத்துக்கிடமான வாகனங்கள்

### மன்னாரில் தீவிர விசாரணைகள் ஆரம்பம்

02 பக்கம்



## மஹிந்த, பெசிலுக்கு எதிரான மனு ஜூலை 05 இல் விசாரணைக்கு



முன்னாள் நிதியமைச்சர்களான மஹிந்த ராஜபக்ஷ, பெசில் ராஜபக்ஷ உள்ளிட்டோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை எதிர்வரும் ஜூலை மாதம் 5ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக... 02 பக்கம்

## தீவிர முதலாளித்துவத்தை முற்றாக நிராகரிக்கிறோம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதாரக் கொள்கையின் பிரகாரம் தீவிர முதலாளித்துவம், தீவிர நட்பு வட்டார முதலாளித்துவம் என்பன முற்றாக நிராகரிக்கப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அனைத்தையும் அரசே செய்ய வேண்டும், அரசாங்கமே... 02 பக்கம்

## இன்று கூடுகிறது பாராளுமன்றம்

பாராளுமன்றம் இன்று 09ஆம் திகதிமுதல் 12ஆம் திகதிவரை கூடுவதற்கு கடந்த 28ஆம் திகதி சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த நான்கு நாட்களும் சபை அமர்வுகள் இடம்பெறவுள்ளதுடன் வாய்மூல விடைக்கான கேள்விக்காக இன்றைய தினம்... பக்கம்



## முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகம் இன்று முதல்

### இனப்படுகொலை நினைவாக யாழ். பல்கலை மாணவர்கள் ஏற்பாடு




**யாழ். செய்தியாளர்**

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நினைவுகூர்ந்து இன்று முதல் எதிர்வரும் 15ஆம் திகதிவரை வடக்கு, கிழக்கு தமிழர் தாயகம் எங்கும் பயணித்து முள்ளிவாய்க்கால் கஞ்சியை வழங்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று (08) இடம்பெற்ற... 02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...

**தமிழரசு ஒரு பக்கம், ரெலோ இன்னொரு பக்கம், புளொட் வேற பக்கம்... இவங்கட பிரச்சினையள தீர்க்கவும் ஏதாவது முயற்சிகள எடுங்கோடாப்பா**



## ரெலிகொம் பங்குகள் விற்பனை செய்யப்படுமா?

**ஜூன் 15 வரை அனுமதியில்லையென திறைசேரி நீதிமன்றுக்கு அறிவிப்பு**

02 பக்கம்

## ஐரோப்பிய ஒன்றிய கூட்டு அமர்வு இன்று

இலங்கைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையிலான கூட்டு ஆணைக்குழுவின் 25ஆவது அமர்வு கொழும்பில் உள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் இன்று இடம்பெறவுள்ளது.



வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஐரோப்பிய வெளிவிவகாரச் சேவையின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்துக்கான பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் பாவோலா பாம்பலோனி ஆகியோர் கூட்டத்துக்கு இணைத் தலைமை தாங்கவுள்ளனர். 02 பக்கம்

## 07 கிலோ தங்கம் கடத்தியவர் கைது

### விமான நிலையத்திலிருந்து வெளியேறும்போது சிக்கினார்

சட்டவிரோதமான முறையில் ஆடைக்குள் மறைத்துவைத்து ஆறு கிலோ 996 கிராம் தங்கத்தைக் கடத்திவந்த நபர் ஒருவர் கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமானநிலைய பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து இலங்கைக்கு வந்த 43 வயதான நபர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக விமான நிலைய பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் கொழும்பு 10, ஸ்ரீசங்கராஜ மாவத்தையை வசிப்பிடமாகக் கொண்டவரென ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

விமான நிலையத்தில் விசாரணைகள் நிறைவடைந்த... 02 பக்கம்

## சுற்றுலாத் தளமாக மாறும் நுவரெலியா



### நடவடிக்கைகளுக்காக சிறப்புக் குழு நியமனம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பிரகாரம் நுவரெலியா நகரை சுற்றுலாத் தளமாக மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக சிறப்புக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தலைமையில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் பங்கேற்புடன் நேற்று (08) நடைபெற்ற கூட்டத்திலேயே இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில்... 02 பக்கம்

## அதிபர் சேவைக்கு 22 இல் நேர்முகம்

இலங்கை அதிபர் சேவையின் மூன்றாம் தரத்துக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் எதிர்வரும் 22ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 1ஆம் திகதிவரை கல்வியமைச்சில் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படவுள்ளனர்.

இந்தப் போட்டிப் பரீட்சை பெப்ரவரி 10, 2019 அன்று நடைபெற்றது. இது தொடர்பான மேலதிக தகவல்களை www.moe.gov.lk என்ற இணையத்தளத்துக்கு சென்று பெற்றுக்கொள்ள முடியும் என கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.



## உஷ்

**மாகாண ஆளுநர்களை மாற்றுவதற்கு ஜனாதிபதி தீர்மானம் எடுத்த கையோடு ஜனாதிபதியை சந்திக்க இப்போதுள்ள ஆளுநர்கள் பலர் தீவிர முயற்சிகளை எடுத்தவண்ணம் உள்ளதாக தகவல். ஆனால் அவர்கள் எவரையும் சந்திக்க ஜனாதிபதி அனுமதி வழங்கவில்லை எனத் தெரிகிறது.**

**மாகாண ஆளுநர்கள் சிலரை மாற்றுவதற்கு ரணில் எடுத்த முடிவில் மாற்றம் வராது என்கின்றன உள்ளகத் தகவல்கள்.**

# அனுமதிப்பத்திரம் புதுப்பிக்காவிடின் கறுப்புப் பட்டியலில் வாகனங்கள்

நாட்டில் 5 வருடங்களாக வருமான அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்காத வாகனங்களை கறுப்புப் பட்டியலில் சேர்க்க மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தீர்மானித்துள்ளது.

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த விசேட அறிக்கை ஒன்றில் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவ்வாறான வாகனங்களை தகவல் அமைப்பிலிருந்து நீக்குவதற்கும் தீர்மானித்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் தற்போது 83 இலட்சம் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

எனினும் 60 இலட்சம் வாகனங்கள் மட்டுமே QR குறியீட்டு முறைமை மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளன.

எனவே, 5 வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக வருமானவரி அனுமதிப்பத்திரம் பெறாத வாகனங்கள், மாவட்ட மோட்டார் வாகன பரிசோதகரின் உதவியுடன் தகவல் அமைப்பில் இருந்து நீக்கப்படும் என மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

# பொலிஸ்மா அதிபரின் பதவிக்காலம் நீடிப்பு

2023 மார்ச் 26ஆம் திகதி முதல் மூன்று மாத கால சேவை நீடிப்புப் பெற்ற பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்கிரமரத்னவின் பதவிக்காலம் மேலும் நீடிக்கப்படவுள்ளதாக அரசாங்கத்தின் உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பொலிஸ் மா அதிபருக்கு வழங்கப்பட்ட மூன்று மாத சேவை நீடிப்பு ஜூன் 26 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

இந்தப் பதவிக்கு தகுதியுள்ள பல மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் தொடர்பான சட்டச் சிக்கல்கள் தீர்க்கப்படாததால் தற்போதைய பொலிஸ் மா அதிபரின் சேவை மீண்டும் ஒருமுறை நீடிக்கப்படும் என சொல்லப்படுகிறது.

இதன்படி தற்போதைய பொலிஸ் மா அதிபருக்கு அடுத்த வருடம் வரை சேவை நீடிப்பு கிடைக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# 74 பணிப்பெண்கள் ஓமானில் நிர்க்கதி

## தாய் நாட்டுக்கு அனுப்புமாறு கோரிக்கை

*(கனகராசா சரவணன்)*

ஓமான் நாட்டுக்கு பணிப் பெண்களாக வேலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு பல்வேறு சித்திரவதையால் அங்கிருந்து வெளியேறி இலங்கை தூதரகத்தில் தஞ்சமடைந்து கடந்த 9 மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ள 74 பணிப்பெண்களையும் நாட்டுக்கு அனுப்புமாறு தடுத்துவைக்கப்பட்டோர் காணொளி ஊடாக உருக்கமாக கோரிக்கையை விடுத்துள்ளனர்.

நாட்டிலுள்ள முகவர்கள் ஊடாக ஓமான் நாட்டுக்கு பணிப்பெண்களாக சென்ற இவர்கள், வீட்டின் உரிமையாளர்களால் அடித்தும் நெருப்பால் சூடு வைத்தும் சித்திரவதைக்குள்ளானவர்கள் மற்றும் சம்பளம் வழங்காமை போன்ற பல்வேறு காரணங்களால் அங்கிருந்து வெளியேறி இலங்கைத் தூதரகத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

இவ்வாறு தூதரகத்தில் தஞ்சமடைந்துள்ளவர்களை (பாதுகாப்பு இடத்தில்) என்ற இடத்தில் தங்கவைத்துள்ளதுடன் அவர்களது தொலைபேசிகளும் பறிமுதல் செய்யப்பட்டு உறவினர்களுடன் தொடர்பு கொள்ள முடியாதளவுக்கு அடைத்து வைத்துள்ளனர். மேலும், திருமணம் கடந்த உறவின் மூலம் கருவுற்றவர்களை உடனடியாக நாட்டுக்கு அனுப்புகின்றனர். ஆனால் அவ்வாறில்லாத எவரையும் நாட்டுக்கு திருப்பியனுப்பாது கடந்த 9 மாதமாக தடுத்து வைத்துள்ளதுடன் வேறு பலரும் நோய்களினால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதுடன் சிறையில் அடைக்கப்பட்டவர்கள் போல நடத்துவதாகவும் தெரிவித்துள்ளனர்.

தமக்கு நடக்கும் அநியாயங்களை வெளியில் எவருக்கும் தெரிவிக்க முடியாத நிலையிலுள்ளதுடன் இங்கிருந்து நாட்டுக்கு செல்லுகின்ற பெண் ஒருவரின் கையடக்கத் தொலைபேசியின் மூலம் உரையாடி, அவரிடம் குறித்த காணொளியை வெளியிடுமாறு தெரிவித்து கதைத்து அனுப்பியுள்ளோம். மேலும், எங்களை இங்கிருந்து காப்பாற்றுங்கள் என்று கைகூப்பி கேட்கின்றோம் என கோரிக்கை விடுத்து அவர்களால் வெளியிடப்பட்டுள்ள காணொளியில் பதிவிடப்பட்டுள்ளது.

## ரணில்...

சார்ள்ஸ் நிர்மலநாதன், சிறிதரன், புளொட் எம்.பி. சித்தார்த்தன் ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்துகொள்ளவுள்ளனர்.

ரெலோ இந்த சந்திப்பில் கலந்துகொள்வது குறித்து நேற்று மாலைவரை உறுதி செய்யப்படவில்லை.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை வழங்குவது தொடர்பில் எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் ஜனாதிபதி ரணில் தமிழ் எம்.பிக்களுடன் பேச்சு நடத்தவுள்ளார்.அதில் வடக்கு எம்.பிக்களை மட்டும் ரணில் சந்திப்பது தொடர்பில் ரெலோ அதிருப்தி கொண்டுள்ளதால் இன்றைய சந்திப்பில் ரெலோ கலந்துகொள்வது நிச்சயம் இல்லையென அந்தக்கட்சியின் தகவல்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் இன்றைய பேச்சுவார்த்தையில் பேசப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் சம்பந்தன் தலைமையிலான விசேட கூட்டமொன்றில் நேற்றிரவு நீண்டநேரம் ஆராயப்பட்டுள்ளது. தமிழரசுக் கட்சியின் எம்.பிக்கள் இந்த கூட்டத்தில் கலந்துகொண்டனர். மத அத்துமீறல் ,காணி அபகரிப்பு உட்பட தமிழர்கள் எதிர்நோக்கும் முக்கிய விடயங்களை இன்றைய கூட்டத்தில் முன்வைப்பதென இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## முள்ளிவாய்க்கால்...

ஊடக சந்திப்பில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் இதனை தெரிவித்தனர்.

அவர்கள் அங்கு மேலும் தெரிவிக்கையில், தமிழர் தாயகம் எங்கும் பயணித்து முள்ளிவாய்கால் கஞ்சியை எமது உறவுகளுடன் பரிமாறி எமது இனம் இனவழிப்புக்குள்ளான வரலாற்றையும் வலிகளையும் எமது இளைய தலைமுறையினருக்கு கடத்தும் செயற்பாட்டை முன்னெடுக்கவுள்ளோம்.

சிங்கள பேரினவாதத்தின் இனவழிப்பு 2009 இல் உச்சத்தை தொட்ட போது முழு உலகமும் சிங்கள வல்லாதிக்கத்துடன் கைகோர்த்து எமது இனம் கொத்துக்கொத்தாக கொன்று குவிக்கப்படுவதை வேடிக்கை பார்த்தன.

1948 ஆம் ஆண்டு முதல் தமிழர் என்ற ஒரே காரணத்துக்காக 1958, 1976, 1983 ஆண்டுகளில் இனப்படுகொலைக்குள்ளான தமிழினம், ஈழப்போர் ஆரம்பிக்கப்பட்ட பின் தினந்தினம் திட்டமிட்ட பாரிய இனவழிப்புக்குள்ளாக்கப்பட்டனர். தமிழர் தாயகமான வடக்கு கிழக்கு எங்கும் தமிழர் என்ற இன அடையாளத்துக்காகவே சிங்கள இராணுவத்தால் கொன்று புதைக்கப்பட்டனர். நவாலி தேவாலயம், செஞ்சோலை என இனவழிப்பின் கரங்கள் நீண்டன.

2001 ஆம் ஆண்டு தொடங்கிய சமாதான பேச்சுவார்த்தையின் பின், 2006ஆம் ஆண்டு எட்டாம் மாதம் தமிழினத்தை அழித்தொழிப்பதற்காக சிங்கள பேரினவாதத்தால் தொடங்கப்பட்ட யுத்தத்தில் சர்வதேசத்தில் தடை செய்யப்பட்ட கொத்தணி குண்டுகள், இரசாயன ஆயுதங்கள் மட்டுமன்றி உணவுத்தடை, மருந்துத்தடை கூட ஆயுதமாக பயன்படுத்தப்பட்டது.

விடுதலைக்காக உயிரைத் துச்சமாக மதித்து களத்தில் நின்ற எமது மக்கள் பட்டினி சாவை எதிர்கொள்ளக்கூடாது என்று தமிழர் புனர்வாழ்வு கழகமும் விடுதலை சார்ந்த அமைப்பும் தம்மிடம் இருந்த அரிசியை பங்கிட்டு முள்ளிவாய்க்கால் கஞ்சியாக காய்ச்சி, அதை மக்களுக்கு வழங்கி, மக்களை பட்டினி சாவிலிருந்து காத்தனர். எறிகணைகளும் கொத்துக் குண்டுகளும் எமது மக்களை கொத்துக்கொத்தாக கொன்ற போதும் பட்டினியால் மக்கள் இறக்கவில்லை.

இந்த உயிர் காத்த கஞ்சியையே இன்று நாம் எமது உரிமைப் போராட்டத்தின் ஓர் வடிவமாக, எமது மக்களின் மீதான இனவழிப்பின் சர்வதேச நீதி தேடலின் ஓர் கருவியாக எமது இளம் சமுதாயத்துக்கு கடத்த வேண்டிய ஒரு கடப்பாட்டில் நாம் அனைவரும் உள்ளோம். நாம் எமது இனவிடுதலையை அடையும் வரை இக்குறியீடு கடத்தப்படும் என உறுதியெடுக்கின்றோம்.

நாம் முன்னெடுக்கும் இச்செயல்பாட்டில் அனைத்து தமிழ் மக்களும் எல்லா வேறுபாடுகளையும் துறந்து தமிழினமாக எம்முடன் இணையுமாறு அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

உங்களுடைய மாவட்டத்துக்கு வரும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு கஞ்சிக்கு உரிய அரிசி மற்றும் இதர பொருட்களை வழங்கி விடுதலைக்கான பயணத்தில் பங்கெடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அத்துடன் தமிழர் தாயகம் எங்கும் இயங்கும் சமூக கட்டமைப்புகள், சிவில் சமூக அமைப்புகள், பொது நிறுவனங்கள், பாடசாலைகள், கல்லூரிகள், ஆலய நிர்வாகங்கள், சமூக இயக்கங்கள், தமிழ் தேசியத்தை நேசிக்கும் அரசியல் கட்சிகள், தனி நபர்களாகவும் கூட்டாகவும் முள்ளிவாய்க்கால் கஞ்சியை உங்களை சூழவுள்ளவர்களுக்கு குறிப்பாக இளையவர்களுக்கு பரிமாறி வரலாற்றையும் எங்கள் இனத்தின் வலிகளையும் தொடராக உலகெங்கும் உள்ள அனைவருக்கும் கடத்துமாறு வேண்டி நிற்கின்றோம் என்றனர்.

முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் முதல் நிகழ்வு இன்று (09) செவ்வாய்க்கிழமை காலை வல்வெட்டித்துறையில் இடம்பெறவுள்ளது.

தொடர்ச்சியாக மருதனார்மடம் சந்தியிலும் காரைநகர் இந்துக் கல்லூரி முன்பாகவும் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் முன்பாகவும் சாவகச்சேரி பேருந்து நிலையம் முன்பாகவும் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகிக்கப்படவுள்ளது.

நாளை புதன்கிழமை (10) காலை கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்பாகவும் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, மாங்குளத்திலும் வியாழக்கிழமை (11) மன்னாரிலும் வவுனியாவிலும் கஞ்சி விநியோகிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை (12) கிழக்கு மாகாணத்தின் திருகோணமலையில் சிவன் கோவில், அன்பொளிபுரம், பத்திரகாளி அம்மன் கோவில்,மூதூர் பகுதியிலும் இடம்பெறவுள்ளது.

மேலும், சனிக்கிழமை (13) மட்டக்களப்பு மாவட்டத்தின் கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் பங்கேற்புடன் வந்தாறுமூலை வளாகம் முன்பாகவும் செங்கலடி, ஆரையம்பதி, மட்டக்களப்பு பிள்ளையார் கோவில் பகுதியிலும் ஞாயிற்றுக்கிழமை (14) அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் மற்றும் பொத்துவில் ஆகிய பகுதிகளில் கஞ்சி விநியோகிக்கப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து மே 15 முதல் யாழ்ப்பாணத்தின் பாடசாலைகளை இலக்கு வைத்து முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மஹிந்த,...

உயர் நீதிமன்றம் நேற்று (08) அறிவித்தது.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்களுக்கு எதிராக விசாரணை நடத்த உத்தரவிடுமாறு கோரி இந்த அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த மனு பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, குறித்த வழக்கை ஜூலை 5 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.






## 07 கிலோ...

பின்னர் வெளியில் வரும்போது சந்தேகமடைந்த போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸார் அந்த நபரிடம் சோதனை நடத்தியுள்ளனர். இதன்போது 04 கிலோ 942 கிராம் எடையுடைய தங்க பிஸ்கட்டுகளும் 02 கிலோ 54 கிராம் எடையுடைய தங்க நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் விமான நிலைய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## சுற்றுலாத் தளமாக...

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன், நுவரெலியா மாவட்ட அரச அதிபர், நகர அபிவிருத்தி அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.

இதன்போது நுவரெலியா நகரை சிறப்பானதொரு சுற்றுலா தளமாக மாற்றுவதற்கு தேவையான விடயங்கள் தொடர்பில் கருத்துகளும் ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டன. இவை தொடர்பில் ஆராய்ந்து, உரிய ஆய்வுகளின் பின்னர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென குழுவொன்றும் அமைக்கப்பட்டது.

சுமார் 10 இற்கும் மேற்பட்டவர்களை உள்ளடக்கிய இக்குழுவில் சுற்றுலாத்துறை, பாதுகாப்பு, நிர்வாகம், திட்டமிடல் துறைசார் அதிகாரிகள் இடம்பெறுவதாக நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு தெரிவித்தது.

## இன்று கூடுகிறது...

மாத்திரம் காலை 9.30 மணி முதல் காலை 10.30 மணி வரை நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இன்று காலை 10.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் செஸ் வரி தொடர்பான கட்டளை, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் 8 கட்டளைகள், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் 3 ஒழுங்குவிதிகள் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் என்பன விவாதத்தை அடுத்து அனுமதிக்கப்படவுள்ளன.

அதனையடுத்து, மாலை 5.00 மணி முதல் மாலை 5.30 மணி வரை ஆளும் கட்சியினால் கொண்டுவரப்படும் பிரேரணைக்கு அமைய சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான விவாதம் இடம்பெறும். நாளை புதன்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 6.00 மணி வரை 'எக்ஸ்-பிரஸ் பேர்ள்' கப்பல் விபத்து தொடர்பில் எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் பிரேரணைக்கு அமைய சபை ஒத்திவைப்பு விவாதத்தை நடத்தத் தீர்மானித்துள்ளதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார். மே 11 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 6.00 மணி வரை இலங்கை மத்திய வங்கி சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் இடம்பெறவுள்ளது. அதனையடுத்து தனியார் உறுப்பினர் சட்டமூலமான ரதனதிஸ்ஸ சமாதான மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலத்தை இரண்டாம் மதிப்பீட்டுக்காக சமர்ப்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மே 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 6.00 மணி வரை நலன்புரி நன்மைகள் சட்டத்தின் கீழ் 2328/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, 'அஷ்வசும' நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுத் திட்டம் தொடர்பான விவாதம் இடம்பெறவுள்ளதாகவும் செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

## மண்சரிவு...

மேலும், மாத்தளை மாவட்டத்தில் பல்லேபொல, அலவ்வ மற்றும் பொல்கஹவெல பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இப்பிரதேச செயலகங்களில் கடந்த 24 மணித்தியாலங்களில் 75 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதால் குறித்த பகுதிகளில் உள்ள மக்களை அவதானமாக இருக்குமாறு கட்டட ஆராய்ச்சி நிறுவனம் கேட்டுக்கொள்கின்றது.

## சீனி, கோதுமை...

அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் நிஹால் செனவிரத்ன குறிப்பிட்டார்.

இதற்கு முன்னர் ஒரு கிலோகிராம் சீனி 225 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டதுடன் விலை அதிகரிப்புக்கமைய ஒரு கிலோகிராம் சீனி 250 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து சீனி இறக்குமதி செய்யப்படுவதைக் கட்டுப்படுத்தும் நோக்கில் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிஹால் செனவிரத்ன கூறியுள்ளார்.

இதேவேளை, ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஒரு கிலோகிராம் கோதுமை மாவுக்கான மொத்த விற்பனை விலை 210 ரூபாவாக அதிகரித்துள்ளது.

கோதுமை மாவுக்கு விதிக்கப்பட்டிருந்த 3 ரூபா வரிச்சலுகை நீக்கப்பட்டமையே இதற்கு காரணமாகும்.

## ரெலிகொம்...

அரசாங்கத்துக்குச் சொந்தமான ஸ்ரீலங்கா ரெலிகொம் பங்குகளை விற்பனை செய்வதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாதென திறைசேரியின் செயலாளர் உயர் நீதிமன்றத்துக்கு நேற்று (08) உறுதியளித்துள்ளார்.

அதனடிப்படையில் ஜூன் 15ஆம் திகதிக்கு முன்னர் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தில் பங்குகளை விற்பனை செய்வதற்கு திறைசேரி அனுமதியளிக்காது என உயர் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா ரெலிகொம் கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ளதோடு SLT PLC இன் வெளியிடப்பட்ட பங்கு மூலதனத்தின் 49.50 சதவீத பங்குகளை திறைசேரி வைத்துள்ளது.

இரண்டு நிறுவனங்களிலும் திறைசேரியிடம் உள்ள பங்குகளை விற்பனை செய்து கொள்வதற்கு அமைச்சரவை கொள்கை அடிப்படையில் ஒப்புதல் அளித்துள்ளதாக திறைசேரியின் செயலாளர் ஸ்ரீலங்கா ரெலிகொம் மற்றும் லங்கா ஹொஸ்பிடல்ஸ் பிஎல்சியின் பணிப்பாளர் சபைக்கு தெரிவித்துள்ளார்.

லங்கா ஹொஸ்பிடல்ஸ் பிஎல்சி மூலதனத்தின் 51.34 சதவீத பங்குகளும் அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடம் உள்ளது.

இந்த நடவடிக்கையானது பல பிரிவுகளை ஒன்றிணைத்துள்ளது. மற்றும் SLT இன் தொழிலாளர்கள் அரசாங்கத்துக்குச் சொந்தமான ஸ்ரீலங்கா ரெலிகொம் பங்குகளை விற்பனை செய்வதற்கு எதிராக பல போராட்டங்களை நடத்தியிருந்தனர்.

தற்போது நிலுவையில் உள்ள பங்கு விற்பனை நடவடிக்கைகள் சட்டபூர்வமான வழிகளில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திறைசேரியின் செயலாளர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

## தீவிர முதலாளித்துவத்தை...

சகல முயற்சியாண்மைகளையும் செய்ய வேண்டும் என்ற தீவிர சோசலிசவாதமும் இல்லை என எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

நாட்டுக்குப் பொதுவாக பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்கள் தொடர்பில் பொது இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் நோக்கில் ஸ்தாபிக்கப்பட்ட எதிர்க்கட்சியின் சர்வகட்சி ஒன்றியத்தின் செயற்குழு பாராளுமன்றத்தில் நேற்று (08) கூடியபோதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டுக்கு தற்போது மாற்று மத்தியஸ்த பாதை அவசியம் எனவும் சமூக நீதிக்கு அமைவாக வளங்களைப் பகிர்ந்தளிக்க அரசாங்கத்தின் தலையீடு அவசியம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

உண்மையில் ஐக்கிய மக்கள் சக்தி மத்தியஸ்த வழியிலான பொருளாதார நோக்கைக் கொண்டுள்ளதாகவும், அரசாங்கத்தால் மட்டுமே பணத்தை உருவாக்க முடியாது என்பதனால் மனிதாபிமான முதலாளித்துவம் அவசியம் என்றும் அது நியாயமாகவும் அனைவரையும் வெற்றிபெறச் செய்வதாகவும் அமைய வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

மத்திய வங்கிச் சட்டம் போன்ற விசேட விடயங்களை குழுக்களின் ஊடாக கலந்துரையாடும்போது இந்த மத்தியஸ்த நடுநிலைப் பாதையை அல்லது சமூக நீதியை நிலைநாட்டும் கலப்புப் பொருளாதார முறைமைக்கு செல்ல வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

தனியார் தொழில்முனைவு மற்றும் சமூக சந்தைப் பொருளாதாரம் மூலம் நாம் முன்னோக்கிப் பயணிக்க வேண்டும் எனவும் இதன் ஊடாக நாட்டைப் பலப்படுத்த முடியும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## ஐரோப்பிய...

இரு தரப்புக்கும் பரஸ்பர நலன்களைக் கொண்ட பரந்தளவிலான இருதரப்பு மற்றும் பலதரப்பு விடயங்கள் குறித்து கூட்டு ஆணைக்குழுவில் கவனம் செலுத்தப்படவுள்ளதுடன் எதிர்கால ஒத்துழைப்புக்கான பகுதிகள் குறித்தும் கலந்துரையாடப்படும். ஆளுகை, சட்டத்தின் ஆட்சி மற்றும் மனித உரிமைகள் மீதான பணிக்குழு, வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான பணிக்குழு மற்றும் அபிவிருத்தி ஒத்துழைப்புக்கான பணிக்குழு ஆகிய கூட்டு ஆணைக்குழுவின் கீழ் நிறுவப்பட்ட மூன்று பணிக்குழுக்களின் முடிவுகள் குறித்தும் இந்த சந்திப்பின் போது விரிவாக கலந்துரையாடப்படும். 2024 - 2033ஆம் ஆண்டுக்கான ஐரோப்பிய ஒன்றிய ஜி.எஸ்.பி. ஒழுங்குமுறையின் புதிய சுழற்சியை ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் விளக்கவுள்ளதுடன் இது 2024 ஜனவரி 01 முதல் அடுத்த 10 ஆண்டுகளுக்கு நடைமுறையிலிருக்கும்.

இலங்கைப் பிரதிநிதிகள் குழுவில் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசியக் கொள்கைகள், நீதி, சிறை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தங்கள், வணிகம், வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு, தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு, கல்வி, சுற்றுச்சூழல், பாதுகாப்பு, மீன்பிடி, பொதுப் பாதுகாப்பு, நகர அபிவிருத்தி மற்றும் வீட்டுவசதி அமைச்சுக்கள் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதிநிதிகள் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

கூட்டு ஆணைக்குழுவின் கூட்டத்தின் முந்தைய அமர்வு பெப்ரவரி 2022 இல் பிரஸ்ஸல்ஸில் இடம்பெற்றது.

## சிறுவர்களை...

*(மன்னார் செய்தியாளர்)*

மன்னாரில் அண்மைக்காலங்களாக சந்தேகத்துக்கிடமான வாகனங்கள் சுற்றித் திரிவதாகவும் சிறுவர்களை இலக்கு வைத்து அவர்களை கடத்தும் நோக்கில் சிலர் மன்னார் மாவட்டத்துக்குள் ஊடுருவியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பாக நேற்று (08) துரித விசாரணை முன்னெடுக்கப்பட்டதோடு பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னாரில் உள்ள பாடசாலை மாணவர் ஒருவரை வாகனம் ஒன்றில் வந்தவர்கள் இனிப்புப் பண்டங்களை வழங்கி குறித்த மாணவரை பலவந்தமாக ஏற்றிச் செல்ல முயற்சி செய்யப்பட்டதாக குறித்த மாணவர் தனது பெற்றோரிடம் தெரிவித்த நிலையில் குறித்த சம்பவம் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் குறித்த மாணவன் கல்வி கற்கும் பாடசாலைக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுக்கும் வகையில் இன்றைய தினம் (நேற்று) காலை விசாரணைகளை மேற்கொண்டேன்.

இதன்போது மேலும் ஒரு மாணவனை நேற்று திங்கட்கிழமை(08) காலை பாடசாலைக்குச் செல்லும் போது இனிப்பு பண்டங்களை வழங்கி வாகனத்தில் ஏற்ற முற்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.இச் சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.இவ்விடயம் குறித்து மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளதோடு பாடசாலை பகுதிகளில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளேன்.மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பாக பாடசாலை அதிபர்கள்,ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் விழிப்புடன் செயற்பட வேண்டும்.குறித்த சம்பவங்கள் குறித்து மன்னார் வலயக்கல்வி பணிப்பாளர் என்னுடன் தொடர்பை ஏற்படுத்தி துரித நடவடிக்கைகள் முன்னெடுப்பதாக தெரிவித்துள்ளார்.எனவே சந்தேகத்துக்கிடமான வாகனங்களின் நடமாட்டம் தெரிந்தால் உடனடியாக பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு வாருங்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தேசிய படைவீரர் நிகழ்வு எதிர்வரும் 19 இல்




நாட்டில் இடம்பெற்ற முப்பது வருடகால யுத்தத்தின்போது வீரமரணம் அடைந்த படைவீரர்களுக்கு தேசத்தின் நன்றி தெரிவிக்கும் தேசிய படைவீரர் நினைவுதின நிகழ்வு முப்படைத்தளபதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான பூர்வாங்க கலந்துரையாடல் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று (08) காலை ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவின் தலைமையில் இடம்பெற்றது.

எதிர்வரும் 19ஆம் திகதி பத்தரமுல்லை படைவீரர் நினைவுத்தூபிக்கு முன்பாக தேசிய படைவீரர் நிகழ்வு நடைபெறவுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகள், பிரதமர்கள், சபாநாயகர், இராஜாங்க அமைச்சர்கள், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உட்பட முப்படைகளின் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் உட்பட பாதுகாப்பு பிரதானிகள், போரில் காயமடைந்த படைவீரர்களின் பங்களிப்புடன் நடைபெறும் இந்த படைவீரர் நினைவு தின நிகழ்வில் பங்குபற்றுவதற்காக யுத்தத்தில் காயமடைந்த படைவீரர்கள், வீரமரணம் அடைந்த படைவீரர்களின் உறவினர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப்படவுள்ளது.

இந்த ஆண்டும் பெருமைக்குரிய வகையில் படைவீரர் நினைவு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், நாட்டின் ஆள்புல ஒருமைப்பாட்டையும் இறைமையையும் பாதுகாப்பதற்கு உயிர்த்தியாகம் செய்த இராணுவம், விமானப்படை, கடற்படை, பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புப்படை வீரர்களின் நித்திய நினைவுகளையும் வீரத்தையும் போற்றும் வகையில் விசேட படைமேள தாளமும் மலர் அஞ்சலியும் இடம்பெறவுள்ளதாக பாதுகாப்பு செயலாளர் ஜெனரல்(ஓய்வுபெற்ற) கமல்குணரத்ன தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன், முப்படைகளின் தளபதிகள் மற்றும் பொலிஸ் மா அதிபர் உட்பட பாதுகாப்புப் பிரிவு பிரதானிகள் கலந்துகொண்டனர்.

# எரிசக்தி - மின்சாரத்துறையை ஊக்குவிக்க யுஎஸ் எய்ட் விருப்பம்



எரிசக்தி துறையின் மறுசீரமைப்பு மற்றும் மின்சார சபை தொடர்பான பாதை வரைப்படத்தை உருவாக்குவதற்கான உதவியை பெற்றுக்கொடுக்க யுஎஸ் எய்ட் நிறுவனம் விருப்பம் தெரிவித்துள்ளது.

அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுக்கும் யுஎஸ் எய்ட் நிறுவனத்தினால் நியமிக்கப்பட்டுயள்ள ஆலோசகர் அரிந்தம் கோஷ் உள்ளிட்ட குழுவினருக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று (08) கொழும்பில் இடம்பெற்றது. இதன்போதே அந்தக் குழுவினர் இதனைக் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த ஒத்துழைப்பினூடாக, அடுத்த எட்டு வாரங்களில் பாதை வரைப்படத்தை உருவாக்கி சீர்திருத்த செயற்பாட்டை மேற்கொள்வதற்கு உதவியை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்குமென எரிசக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, யுஎஸ் எய்ட் நிறுவனத்தின் இந்த உதவிக்கு நன்றியை தெரிவித்துக்கொள்வதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் சித்திரை மாதம் 26ஆம் நாள்**
**செவ்வாய்க்கிழமை**

**மேஷம்** — பூர்வீக சொத்துகளால் வில்லங்கம் ஏற்படும். தந்தைக்கும் உங்களுக்கு மிடையிலான உறவு பாதிக்கப் படும்.

**ரிஷபம்** — திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் மந்தநிலையை அடையும். வாய்ப் பேச்சால் வீண் பிரச்சினைகள்.

**மிதுனம்** — கூட்டுத் தொழில், வியாபாரத்தில் நல்ல இலாபம் உண்டு. நீண்ட நாள் உங்கள் மனக்குறை தீரும்.

**கடகம்** — நினைத்த காரியத்தில் வெற்றி கிட்டும். நோய், கடன், எதிரி இவை எதுவுமே இன்று உங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது.

**சிம்மம்** — மனதை ஒரு நிலையில் வைத்துக் கொள்ளுங்கள். புத்திரர்களால் தொல்லையும் கவலையும் தோன்றும்.

**கன்னி** — எதிர்பாராத சில விபத்துகளில் சிக்கலாம். வீடு, வாகனம் வாங்குவதும் விற்பதும் இன்றைய நாளில் கூடாது.

**துலாம்** — நெருங்கிய நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். மன உறுதியுடன் அனைத்தையும் வெற்றிக் கொள்வீர்கள்.

**விருச்சிகம்** — குதர்க்கமான பேச்சால் அவமானம், அபகீர்த்தி ஏற்படும். உங்களால் குடும்பத்தில் குழப்ப நிலைகள் உருவாகலாம்.

**தனுசு** — குடும்பத்தில் மங்கள காரியங்கள் நடைபெற்று மகிழ்ச்சி பிறக்கும். நோயிலிருந்து விடுதலை அடைவீர்கள்.

**மகரம்** — தேவையற்றவர்களின் நட்பால் தொல்லைகள் உருவாகும். உணவு, உறக்கம் தேடிப் போனாலும் கிடைக்காது.

**கும்பம்** — தொழில் வியாபாரத்தில் அதிக இலாபங்களை பெறுவீர்கள். எதிர்பாராத தன வரவால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**மீனம்** — தொழில் மூலமாக பதவி உயர்வுகள், சம்பள உயர்வுகள் அமையும். புதிய பதவிகள் வந்து சேரும்.

| | |
|---|---|
| **திதி:** | சதுர்த்தி பி.ப.4.08 வரை பின் பஞ்சமி (தேய்) |
| **நட்சத்திரம்:** | மூலம் பி.ப.5.45 வரை பின் பூராடம் |
| **யோகம் :** | சித்த யோகம் பி.ப.5.45 பின் அமிர்தசித்தம் |
| **வார சூலை:** | வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| **நல்ல நேரம்:** | மு.ப. 7.54 – 8.54 மணிவரை |
| **ராகு காலம் :** | 2.54 – 4.24 மணிவரை |
| **எமகண்டம் :** | 8.54 – 10.24 மணிவரை |
| **குளிகை :** | 11.54 – 1.24 மணிவரை |
| **சந்திராஷ்டமம் :** | இடப ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும் |
| **தன அதிர்ஷ்டம்:** | ஆயிலியம்,கேட்டை, ரேவதி(பிறந்தவர்களுக்கு) |
| **விசேட தினம் :** | --------- |

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
**(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)**
**ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.**
**தொலைபேசி : 077-0525325 078-6759739**

# வறுமை வீதம் 25ஆக அதிகரிப்பு!

## சமிந்த விஜயசிறி தெரிவிப்பு



மத்திய வங்கியின் புதிய அறிக்கையின் பிரகாரம், நாட்டின் வறுமை 13.1 சதவீதத்திலிருந்து 25 சதவீதம் வரை அதிகரித்துள்ளது. ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான தற்போதைய போக்கு ஏற்புடையதாக இருந்தால் இதற்கு அரசாங்க தரப்பில் எவரேனும் பதிலளிக்க வேண்டுமென்று பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜயசிறி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (08) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் சாதாரண ஜீவனோபாயத்துக்கும் அடுத்த ஆண்டு மிகவும் ஆபத்தானது என மத்திய வங்கியின் புதிய அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

மக்கள் மண்ணெண்ணெய் பாவனையை 75 சதவீதமாக குறைத்துள்ளனர். எரிவாயு, பெட்ரோல் மற்றும் டீசல் பாவனையை விட்டும் ஒதுங்கியுள்ளனர். இதனால் குறிப்பிட்டளவு சந்தைத் தேவை குறைந்துள்ளது.

மத்திய வங்கி மோசடியை விட இருமடங்கில் சீனி மோசடியில் ஈடுபட்டவர்கள் வெளிப்படையாக தெரிந்தும் ஜனாதிபதி எந்த வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாது இருக்கிறார். ஜனாதிபதியால் இதை எதிர்பார்க்க முடியாது.

ஊழலுக்கும் மோசடிகளுக்கும் இடம்கொடுத்த பிரகாரமே இந்த ஆட்சி தொடர்கிறது. மக்களுக்கு தேர்தல் மூலம் சந்தர்ப்பத்தை வழங்குங்கள் என்றே நாம் கோரிக்கை விடுக்கிறோம்.

ஏழு மூளைக்காரன் என அழைக்கப்பட்ட பெசில் ராஜபக்ஷ ஓடிஒழிந்து இருந்து விட்டு இன்று தான் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் என சர்வசாதாரணமாக கூறும் நிலையை ஏற்படுத்தியது ரணில் விக்கிரமசிங்க ஆவார் என்றார்.

# தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கார் - வேன் மோதி விபத்து:

## ஐவர் வைத்தியசாலையில் அனுமதி

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கஹாதுடுவ 8.4 கிலோ மீற்றர் வெளிவெல்லகொல பிரதேசத்தில் நேற்று முன்தினம் வேனொன்றும் காரொன்றும் மோதி விபத்துக்குள்ளானதில், சிறுமி உள்ளிட்ட ஐவர் காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக தெற்கு அதிவேக நெடுஞ்சாலை போக்குவரத்து பிரிவு தெரிவித்துள்ளது.

08, 31, 39, 70 மற்றும் 72 வாயதுடைய ஆணொருவர், பெண்கள் மூவர், சிறுமியொருவருமே இவ்வாறு காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

காயங்களுக்குள்ளான ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இவர்கள் மாத்தறை பிரதேசத்தில் இடம்பெற்ற திருமண நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் மீண்டும் அத்தனகல்ல பிரதேசத்தை நோக்கி வேனொன்றினூடாக பயணித்துக்கொண்டிருந்தபோது, மாத்தறையிலிருந்து கொழும்பை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த காரொன்று வேனின் பின்னால் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கார், வேனுடன் மோதியதும் குறித்த வேன் மூன்று முறை சுழன்றுச் சென்றுள்ளதுடன் வீதியின் இடது புறமாக இருந்த இரும்பு வேலியில் மோதி புரண்டுச் சென்றுள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

வேன் புரண்டு மோதியதால் உள்ளே இருந்த 08 வயது சிறுமி ஜன்னலினூடாக வெளியில் வீசப்பட்டு கீழே விழுந்துள்ளதுடன் பெண்கள் வேனின் பின்புறமாக கீழே விழுந்துள்ளதாக விபத்தை நேரில் கண்ட இந்த வாகனத்துக்கு பின்னால் பயணித்த காரின் சாரதியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

# பெரஹெரவில் கலந்துகொண்ட பாகன் யானையிலிருந்து கீழே விழுந்து காயம்



கம்பஹா சாம மகா விகாரையினால் முன்னெடுக்கப்பட்ட பெரஹெரவின் போது, யானையின் மீதிருந்த பாகன் யானை பின்னோக்கி நகர்ந்தபோது கீழே வீழ்ந்துள்ளார்.

பெரஹெர, கம்பஹா நகர் வீதியில் பயணித்தபோது புகையிரத நிலையத்தில் அருகில் வைத்து இவ்வாறு பாகன் கீழே வீழ்ந்துள்ளதுடன் அவரை உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திடீரென ஏற்பட்ட நோய் நிலைமையினால் குறித்த பாகன் கீழே விழுந்துள்ளதாகவும் அவர் உடல் நிலை பாரதூரமாக பாதிக்கவில்லை என்றும் கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் வைத்தியர் பிரியந்த இலேபெரும தெரிவித்துள்ளார்.

# களுத்துறையில் பாடசாலை மாணவி மர்மமான முறையில் உயிரிழப்பு

## சந்தேகத்தின் அடிப்படையில் மூவர் கைது



மர்மமான முறையில் உயிரிழந்த களுத்துறை பாடசாலையொன்றை சேர்ந்த மாணவியின் மரணம் தொடர்பில் மேலுமொரு நபரொருவர் சந்தேகத்தின் அடிப் படையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த மாணவியை ஹோட்டலுக்கு அழைத்துச் சென்ற காரின் சாரதியொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் குறித்த மாணவியின் மரணம் தொடர்பில் அவருடன் ஹோட்டலுக்கு வருகை தந்த தம்பதியினர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டிருந்தனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகபர்கள் மூவரும் நேற்று முன்தினம் (07) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்த நிலையில் எதிர்வரும் 15ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

குறித்த மாணவி கடந்த 06ஆம் திகதி மாலை 6.30 மணியளவில் மேலும் இரு இளைஞர்கள் மற்றும் யுவதியொருவருடன் அந்த பிரதேசத்திலுள்ள ஹோட்டலொன்றுக்கு சென்றுள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

பின்னர் அவர்களின் தேசிய அடையாள அட்டையை வழங்கி, குறித்த ஹோட்டலில் இரண்டு அறைகளில் ஒதுக்கிக்கொண்டுள்ளனர். அவ்வாறு, இரு அறைகளை ஒதுக்கிக்கொண்டு அங்கு சென்றிருந்தாலும் குறித்த நால்வரும் ஒரே அறையிலிருந்து மதுபானம் அருந்தியதை ஹோட்டல் சேவையாளர் ஒருவர் கண்காணித்துள்ளார்.

அதன் பின்னர் அவர்களில் இளைஞரொருவரும் ஹோட்டலிலிருந்து வெளியேறிச் சென்றுள்ளனர். அதன் பின்னர், 20 நிமிடங்கள் கழிந்து மற்றைய இளைஞரும் குழப்பத்தில் ஹோட்டலிலிருந்து வெளியேறியதை பணியாளர்கள் அவதானித்துள்ளனர்.

அதன் பின்னர் ஹோட்டலுக்கு உணவு கொள்வனவு செய்வதற்காக வந்த நபரொருவர், ஹோட்டலுக்கு அண்மையிலுள்ள புகையிரத வீதியில் பெண்ணொருவர் நிர்வாணமாக வீழ்ந்து கிடப்பதாக ஹோட்டல் பணியாளருக்கு அறிவித்திருக்கிறார்கள்.

அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அதனை தொடர்ந்து பொலிஸ் அதிகாரிகள் சம்பவ இடத்தை பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளதுடன் குறித்த மாணவி அதன்போது உயிரிழந்திருந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நாகொட பிரதேசத்தைச் சேர்ந்த களுத்துறை பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றில் 11ஆம் தரத்தில் கல்வி கற்கும் 16 வயது மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேலும், உயிரிழந்த மாணவி ஹோட்டலுக்குள் செல்வதற்கு வயது தடையாக இருந்ததால் இன்னுமொருவரின் அடையாள அட்டையை காண்பித்தே ஹோட்டலுக்குள் சென்றுள்ளார் என்பது பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளதுடன், இதனுடன் தொடர்புடைய மேலும் சில காரணங்களை உறுதிப்படுத்திக் கொண்டுள்ளனர்.

திடீர் குழப்பத்துடன் ஹோட்டல் அறையிலிருந்து வெளியேறிய இளைஞர், அவருக்கு முன்னர் அங்கிருந்து வெளியேறிய இளைஞருக்கும், யுவதிக்கும் அவசரம் என்று கூறி அவர்களை அங்கு அழைத்துவிட்டே வெளியேறியிருக்கிறார்.

உயிரிழந்த மாணவி குறித்த ஹோட்டலின் மூன்றாவது மாடியிலிருந்து புகையிரத வீதிக்கு பாய்ந்ததாகவும், அதன் பின்னர் தான் அங்கிருந்து காரில் தப்பித்துச் சென்றுவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பின்னர் மற்றைய இளைஞரும் யுவதியும் புகையிரத வீதியில் விழுந்திருந்த மாணவியை அந்த வீதியிலிருந்து ஒதுக்கிவிட்டு, அங்கிருந்து வெளியேறியுள்ளதுடன் பின்னர் இரவு 9.30 மணியளவில் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளனர்.

இறுதி நொடிவரை உயிரிழந்த மாணவியின் அருகில் இருந்துவிட்டு தப்பிச் சென்ற சந்தேக நபரை கைதுசெய்வதற்கான மேலதிக விசாரணைகளை களுத்துறை தெற்கு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். குறித்த சந்தேகநபர் இதுவரையில் இரு பெண்களை மணந்துள்ளதுடன் அவர் இரண்டாவதாக மணந்துகொண்ட பெண்ணிடம் பொலிஸார் கருத்து பதிவும் செய்து கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த மாணவியின் சடலம் சட்ட வைத்தியரிடம் ஒப்படைக்கப்பட்டதன் பின்னர், அதன் அறிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கமைய, மாணவியின் சடலம் அரச இரசாயன பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதயகுமார அமரசிங்க தெரிவித்துள்ளார்.

அதேபோன்று, உயிரிழந்த மாணவி பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கக்கூடிய ஆதாரங்கள் இருப்பதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மன்னார் பிரதான பாலத்தில் விபத்து



(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் தள்ளாடிக்கும் பெரிய பாலத்துக்கும் இடையில் கெப் ரக வாகனம் வீதியோர கற்களில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த விபத்தானது ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இரண்டு மணியளவில் இடம்பெற்றுள்ளது. மன்னார் சிலாவத்துறை வேப்பங்குளம் பகுதியில் இருந்து கடல் உணவு ஏற்றி வந்துள்ளனர். இதன்போது குறித்த வாகனத்தின் சாரதி நித்திரை கலக்கத்தில் வீதியோர கற்களில் மோதி வாகனம் தடம் புரண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

வாகனத்தின் சாரதி காயங்களுடன் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


# வெற்றி நிச்சயம்



**"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.**

**உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/Srimath Suwamiji/**

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2023, மே 09ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை**

# தமிழர் எண்ணத்தைக் கூறிய சம்பந்தன்

இலங்கையில் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண இந்தியாவின் ஒத்துழைப்பு அவசியமென்றும் தமிழர் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்படும் தீர்வொன்றுக்கு புதுடில்லியின் ஆதரவு அவசியமெனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயிடம் திட்டவட்டமாக தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்புகள் எதிர்வரும் நாட்களில் நடைபெறவுள்ள நிலையில், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகருக்கும் சம்பந்தனுக்குமிடையில் சம்பந்தனின் இல்லத்தில் கடந்த வெள்ளிக்கிழமை சந்திப்பொன்று நடந்துள்ளது.

இதன்போது இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயிடம், சிங்கள –பௌத்தமயமாக்கலுக்கு உடனடியாக முடிவுகட்ட வேண்டுமெனவும் நிரந்தர அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தியதாக சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழர் பிரச்சினைக்கு நியாயமான, அவர்களின் அபிலாஷைகள் கவனத்திற்கொள்ளப்பட்ட தீர்வு வேண்டுமென்ற இந்தியாவின் நிலைப்பாடு, ரணிலின் அரசு தமிழர் பிரதிநிதிகளுடன் நடத்தவுள்ள பேச்சிலும் வெளிப்படுத்தப்படவேண்டுமென்றும் அதனை இந்தியாவுக்கு அறியப்படுத்துமாறும் இச்சந்திப்பில் சம்பந்தன், இந்திய உயர்ஸ்தானிகரை கேட்டுக்கொண்டாரென அறியமுடிந்தது.

இச்சந்திப்பு தொடர்பில் சம்பந்தன் மேலும் தெரிவிக்கையில், *''யாழ்ப்பாணம் - தையிட்டியில் தமிழ் மக்களின் காணியில் சட்டவிரோதமாக பௌத்த விகாரை அமைக்கப்பட்டுள்ளதை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இந்தச் சட்டவிரோத நடவடிக்கை வடக்கு - கிழக்கில் நீண்டகாலமாகத் தொடர்கின்றது. தமிழ் மக்களின் காணிகளில் சட்டவிரோதமாகப் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுவது மட்டுமன்றி, சில இடங்களில் சைவக்கோயில்களும் தாக்கப்பட்டு வருவதுடன், அழிக்கப்பட்டும் வருகின்றன. கூடியளவுக்கு இந்தச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு நாங்கள் முயற்சி எடுத்து வந்திருக்கின்றோம். தொடர்ந்தும் எடுப்போம். இந்நடவடிக்கைகள் முடிவுக்கு வரவேண்டுமெனில் ஒரு நியாயமான - நிரந்தரமான - தமிழ் மக்கள் பாதுகாப்பாக வாழக் கூடிய அதிகாரப்பகிர்வுடன் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். அதற்காக எம்மாலான அனைத்துப் பங்களிப்புகளையும் வழங்கி வருகின்றோம். அரசியல் தீர்வு விரைந்து காணப்பட வேண்டும். ஏனெனில், இந்நாடு மீண்டெழ வேண்டுமெனில் அரசியல் தீர்வு கட்டாயம் வேண்டும். ஜனாதிபதியை நாம் சந்திக்கும்போது இது தொடர்பில் பேசுவோம். ஏனைய சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளுடனும் வடக்கு, கிழக்கில் தொடரும் சிங்கள - பௌத்த மயமாக்கல் மற்றும் அரசியல் தீர்வு விரைந்து காணப்பட வேண்டும் என்பவை தொடர்பில் பேசி வருகின்றோம்''* என்றும் தெரிவித்துள்ளார் சம்பந்தன்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைத் தீருவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான குழுவை முதற்கட்டமாக சந்திக்கவுள்ள நிலையில், தமிழர் பிரச்சினை தொடர்பான இந்தியாவின் வகிபாகத்தை சம்பந்தன் சுட்டிக்காட்டியிருப்பது சிறந்த விடயம்.

இலங்கையில் தமிழர் பிரச்சினை அவர்களின் அபிலாஷைகள் நிறைவேறும் வகையில் வழங்கப்படவேண்டுமென இந்தியா காலகாலமாக வலியுறுத்தி வருகிறது. குறைந்தபட்ச தீர்வாக இந்தியா அறிமுகப்படுத்திய மாகாண சபை முறைமையே இப்போது முடக்கப்பட்டிருப்பதன் மூலம் இந்தியாவின் பேச்சுக்கு இலங்கை எந்தளவு தூரம் காதுகொடுக்கிறது என்பதை சொல்லித் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை. அதுமட்டுமல்ல, தமிழர் வாழ்விடங்கள், அவர்களின் வரலாறுகள் அழிக்கப்படும் அளவுக்கு சம்பவங்கள் நாளாந்தம் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

இலங்கைத்தீவில் ஏறக்குறைய, அரைநூற்றாண்டு காலத்திற்கு மேலாக, ஈழத்தமிழ் மக்கள் தம்முடைய சுயநிர்ணய உரிமைகளுக்காகவும், பாதுகாப்புக்காகவும் போராடி வந்தார்கள். 1972ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில்தான், சுதந்திரத் தமிழீழம் கோரி தமிழ் இளைஞர்கள் போராடினார்கள். ஐம்பது ஆண்டு காலத்திற்குப் பிறகும் அவர்களுக்குத் தீர்வு கிடைக்கவில்லை. கடந்த 2009, 2010ஆம் ஆண்டுகளில் ஈழத்தமிழ் மக்கள் மீது நடத்திய கடைசி நேரத்தாக்குதலில், ஒருசில தினங்களில் மட்டுமே கொத்துக்குண்டுகளால் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் படுகொலைக்கு ஆளானார்கள். மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்டோர் முள்வேலி முகாம்களில் கொல்லப்பட்டார்கள். ஆனால், இன்றுவரை தமிழ் மக்களுக்கு எந்தவிதமான தீர்வும் வரவில்லை.

இலங்கையில் தமிழர்கள் ஏமாற்றப்பட்ட வரலாறு இந்தியாவுக்குத் தெரியாததல்ல. தமிழ் அரசியல் தலைவர்களுக்கும் புரியாததல்ல. அதற்காக தீர்வுப்பேச்சுக்கான அழைப்பை நிராகரித்துவிட முடியாது. ஜனாதிபதியுடனான தமிழ்த் தலைவர்களின் பேச்சுகள் ஆரம்பித்து நடக்கட்டும். அது வெற்றியடைய இந்தியாவின் பங்களிப்பு இராஜதந்திர மட்டத்தில் தேவையானது. இன்றியமையாதது. அதனையே சம்பந்தன் இந்திய உயர்ஸ்தானிகரிடம் வலியுறுத்தியுள்ளார். தமிழர்களின் எண்ணப்பாடும் அதுவே.

# நீட்சியும் மாற்றமும்!



பிரிட்டனின் அரசராக மூன்றாம் சார்ள்ஸ் முடிசூட்டப்பட்டிருக்கிறார். லண்டனிலுள்ள வெஸ்ட் மின்ஸ்டர் அபே தேவாலயத்தில் நடைபெற்ற சடங்கில் பிரிட்டனின் 40ஆவது மன்னராக முடிசூட்டப்பட்டிருக்கும் மூன்றாம் சார்ள்ஸ், தனது மூன்றாவது வயதிலிருந்து இந்நிகழ்வுக்காகக் காத்திருந்தார் என்பதுதான் வரலாற்று விசித்திரம். 1969இல் தனது 20ஆவது வயதில் பட்டத்து இளவரசராக அறிவிக்கப்பட்ட மூன்றாம் சார்ள்ஸின் காத்திருப்பு முடிவுக்கு வந்து இப்போது மன்னராகி இருக்கிறார் அவர்.

மன்னர் வில்லியம் பிரிட்டன் அரசராக தன்னை அறிவித்துக் கொண்டதில் தொடங்குகிறது அந்த சாம்ராஜ்ஜியத்தின் பரம்பரை. வில்லியம் முடிசூட்டிக் கொண்ட வெஸ்ட் மின்ஸ்டர் அபே தேவாலயத்தில் அதே வழிமுறை ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளாகத் தொடர்கிறது. 1661இல் இரண்டாவது சார்ள்ஸ் மன்னருக்காக உருவாக்கப்பட்ட கிரீடம்தான் தொடர்ந்து பிரிட்டிஷ் மன்னர்களுக்கு முடிசூட்டு விழாவில் சூட்டப்படுகிறது.

மன்னராக முடிசூட்டப்பட்டிருக்கும் மூன்றாம் சார்ள்ஸ், 1971 முதல் 1976 வரை 'பிரிட்டிஷ் ரோயல் நேவி' எனப்படும் கடற்படையில் பணியாற்றி இருக்கிறார். கரீபியன் கடலிலும், பசிபிக் கடலிலும் கடற்படை அதிகாரியாகப் பணியாற்றிய வேல்ஸ் இளவரசர், ஹெலிகொப்டர் உள்ளிட்ட சிறு விமானங்களைச் செலுத்துவதிலும் தேர்ச்சி பெற்றவர். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் டிரினிட்டி கல்லூரியில் 1970இல் அவர் பட்டம் பெற்றபோது, பிரிட்டிஷ் அரியணைக்கு தயாராகும் ஒருவர் பட்டம் பெற்றது அதுவே முதன்முறை.

பக்கிங்ஹாம் அரண்மனையில் கோலோச்ச இருக்கும் மூன்றாம் சார்ள்ஸ் மன்னர், சுற்றுச்சூழல் ஆர்வலர். இயற்கை விவசாயத்தில் நாட்டம் உள்ளவர். வாழ்க்கை முறை மாற்றத்தால் உலகம் முழுவதும் பெருகிவரும் பிளாஸ்டிக், மின்னணு உள்ளிட்ட கழிவுகள் அதிகரிப்பது குறித்து கவலைப்படுபவர். ஆயுர்வேதம், யோகா உள்ளிட்டவற்றில் நாட்டம் கொண்டவர். மனித இனத்தின் வருங்காலம் குறித்தும், இயற்கை பாதுகாப்பு குறித்தும் கவலைப்படும் ஒருவர் பிரிட்டிஷ் மன்னராக முடிசூட்டப்பட்டிருக்கிறார்.

பக்கிங்ஹாம் அரண்மனையில் இருந்து 2.2 கி.மீ. தொலைவிலுள்ள வெஸ்ட் மின்ஸ்டர் அபே தேவாலயத்துக்கு கிளம்பியதிலிருந்து கென்டர்பரி ஆர்ச் பிஷப் ஜஸ்டின் வெல்பி முடிசூட்டு விழாவை நடத்தியது வரையிலான எல்லா நிகழ்வுகளும் முந்தைய முடிசூட்டு விழா நடைமுறைகளில் இருந்து சற்றும் வழுவாமல் நடத்தப்பட்டன. பிரிட்டனை நீதி நெறி தவறாமல் கருணையுடன் ஆட்சி நடத்துவேன் என்றும், அனைத்து சமயங்களைச் சார்ந்தவர்களும் சுதந்திரமாக வாழ்வதற்கான வழிமுறைகளை ஏற்படுத்துவேன் என்றும் மன்னர் மூன்றாம் சார்ள்ஸ் உறுதிமொழி எடுத்துக்கொண்டார்.

பாரம்பரிய வழக்கப்படி, பிரிட்டன் பிரதமர் நன்மொழி வாசிப்புக் கூட்டத்தை நடத்த வேண்டும். இந்து சமயத்தைப் பின்பற்றும் முதல் இந்திய வம்சாவளி பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக், பைபிளில் இருந்து வாசகங்களை வாசித்தது, பிரிட்டனில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்தின் அறிகுறி. சீக்கிய மதகுருவான 90 வயது இந்திரஜித் சிங்கும் இந்து சமயத்தைச் சேர்ந்த பாபுபாய் படேலும் முஸ்லிம்கள், யூதர்கள் என்று பல சமயங்களைச் சேர்ந்த தலைவர்களும் கலந்துகொண்ட முதல் பிரிட்டிஷ் முடிசூட்டு விழா இதுவாகத்தான் இருக்கும்.

ஒருபுறம் மன்னராட்சி முறை தேவைதானா என்கிற கேள்வி எழுப்பப்பட்டாலும், உலகின் பெரும்பான்மையான மக்கள் மன்னராட்சி முறையை விரும்புகிறார்கள் என்பதைத்தான் பிரிட்டிஷ் மகாராணியின் மறைவுக்கும் மூன்றாம் சார்ள்ஸின் முடிசூட்டு விழாவுக்கும் காணப்பட்ட ஆர்வம் தெரிவிக்கிறது. உலகிலுள்ள முதல் 20 ஜனநாயக நாடுகளில், அடையாள மன்னராட்சி முறை 10 நாடுகளில் நிலவுகிறது. 20 பணக்கார நாடுகளில் 9 நாடுகளில் மன்னராட்சி இருக்கிறது. 10 முக்கியமான அரசமைப்புச் சட்டங்களில் எட்டு, அடையாள மன்னராட்சி முறையைக் கொண்டிருக்கின்றன.

இந்தியாவையே எடுத்துக்கொண்டால், சுதந்திர குடியரசாக இருந்தாலும் அரசர்கள் மீதான ஈர்ப்பு விலகவில்லை என்பதை அசோகர், ராஜராஜ சோழர், சத்ரபதி சிவாஜி, ஜான்சி ராணி, வீரபாண்டிய கட்டபொம்மன் போன்றோரின் செல்வாக்கு உணர்த்துகிறது. மன்னராட்சி முறை சார்ந்த மேதகு, மாண்புமிகு, தலைவர் உள்ளிட்ட அடைமொழிகள் தொடர்கின்றன.

மன்னராட்சி முறையைப் போலவே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அடையாளமான கொமன்வெல்த்தும் விமர்சனத்துக்கு இடையிலும் தொடர்கிறது. முந்தைய பிரிட்டிஷ் கொலனிகளான 56 நாடுகள் அடங்கிய கொமன்வெல்த்தில் இடம்பெற்றாலும், பிரிட்டனைப் போலவே மூன்றாம் சார்ள்ஸ் மன்னரை தங்களது அடையாள மன்னராட்சி முறையின் தலைவராக எல்லா நாடுகளும் ஏற்றுக்கொள்ளவில்லை. குடியரசுகளான புருணை, எஸ்வாதினி, லெசோதோ, மலேசியா, டோங்கா ஆகிய ஐந்து நாடுகளில் மன்னர்கள் இருந்தாலும், அவர்களும் கொமன்வெல்த் உறுப்பினர்கள்.

இரண்டாண்டுகளுக்கு முன்பு பிரிட்டிஷ் அரச குடும்பத்திலிருந்து தன்னை விலக்கிக் கொண்டு குடியரசாக அறிவித்துக்கொண்ட 18ஆவது நாடு பார்படோஸ். அவுஸ்திரேலியா, பஹாமாஸ், கரீபிய கடலை ஒட்டிய ஐந்து நாடுகள் உள்ளிட்டவை பார்படோஸ் போலவே பிரிட்டிஷ் அரச குடும்பத்திலிருந்து விடுவித்துக்கொள்ள விழைகின்றன. தலைமைப் பொறுப்பில் இருந்து விலகிக்கொண்டாலும் இந்தியா உள்ளிட்ட கொலனிகளை கொமன்வெல்த்தின் மூலம் இணைத்து வைத்திருந்தார் இரண்டாம் எலிசபெத் மகாராணி. நீண்டநாள் காத்திருப்புக்குப் பிறகு அரசராகியிருக்கும் மூன்றாம் சார்ள்ஸ், அதே அணுகுமுறையைக் கடைப்பிடிப்பார் என்று எதிர்பார்க்கலாம்.

*(நன்றி - தினமணி)*

# பிரான்ஸ் காதலி - நமஸ்தே ஹோட்டல் - வைன் தொழிற்சாலை; இலங்கை போதைப்பொருள் கடத்தல்காரன் பற்றிய பகீர் தகவல்கள்!







சர்வதேச போதைப்பொருள் கடத்தல்காரரா கவும் பாதாள உலகக் குழு தலைவராகவும் அறியப்படும் இரத்மலானை குடு அஞ்சு, பிரான்ஸில் அகதியாக வாழ்ந்துகொண்டு அங்கு மிகப்பெரிய வர்த்தகங்களை நடத்த எவ்வாறு பணத்தைப் பெற்றார் என்பது பற்றி பிரான்ஸ் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த ஏப்ரல் 26ஆம் திகதி பிரான்ஸ் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட குடு அஞ்சு என அழைக்கப்படும் சின்ஹார அமல் ஷமிந்த சில்வா, சர்வதேச பொலிஸாரால் சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்ட தேடப்படுபவர்.

**குடு அஞ்சுவின் மனைவி**

தனது மனைவியைக் கைவிட்டு, பிரான்ஸ் யுவதியைத் திருமணம் செய்யத் தீர்மானித்திருந்த நிலையில், அஞ்சுவுக்கும் அவரது மனைவிக்குமிடையில் தகராறு ஏற்பட்டுள்ளது. அஞ்சு தனது மனைவியைத் தாக்கியுள்ளார். இது குறித்து மனைவி பிரான்ஸ் பொலிஸாரிடம் முறையிட்டதுடன், அஞ்சு சர்வதேச பொலிஸாரால் தேடப்படுபவர் என்ற தகவலையும் வழங்கியுள்ளார்.

கைதுசெய்யப்பட்டபோது அஞ்சு அகதியாக வாழ்க்கை நடத்தியவர். பணமோசடியின் கீழ் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அந்நாட்டு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இரத்மலானை குடு அஞ்சு கடந்த 4ஆம் திகதி பிரான்ஸ் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து, அவர் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டதுடன், பணமோசடியின் கீழ் சொத்துகளை எவ்வாறு பெற்றுக்கொண்டார் என்பது தொடர்பில் பிரான்ஸ் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பணமோசடி என்பது பிரான்ஸ் சட்டத்தின் கீழ் மிகவும் கடுமையான குற்றமாக கருதப்படுகிறது.

குடு அஞ்சுவின் காதலி என்று கூறப்படும் பிரான்ஸ் யுவதியின் பெயரில் பிரான்ஸில் ஆடம்பர உணவகம் ஒன்று வாங்கி நடத்தப்பட்டு வருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. 'நமஸ்தே ரெஸ்டோரண்ட்' என்ற பெயரில் அது இயங்கி வருகிறது.

அஞ்சுவின் போதைப்பொருள் வருமானம் குறித்த பிரான்ஸ் யுவதியின் பெயரிலேயே கணிசமான முதலீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

'நமஸ்தே' உணவகத்தில் அடிக்கடி இரவு விருந்துகளும் கொண்டாட்டங்களும் நடப்பதாகவும், குடு அஞ்சுவின் பிரான்ஸ் காதலியும் அவற்றில் கலந்துகொண்டு நடனமாடுவதாகவும் அந்நாட்டின் நம்பகமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும், அந்நாட்டின் போர்டாக்ஸ் பகுதியில் வேறொருவரின் பெயரில் வைன் தொழிற்சாலையொன்றை அவர் நடத்தி வருவதாகவும் கூறப்படுகிறது.

போதைப்பொருள் கடத்தல்காரர்களாகவும் பாதாள உலக செயற்பாட்டாளர்களாகவும் கருதப்படும் ஜூட் பிரியந்த மற்றும் பட்டுவத்த சாமர ஆகியோருடன் இரத்மலானை போதைப்பொருள் கடத்தல்காரன் அஞ்சு, பிரான்ஸுக்கு தப்பிச் சென்று பிரான்ஸில் தலைமறைவாக உள்ளதாக தகவல்கள் வெளியான நிலையில், குடு அஞ்சுவுக்கும் அவரது மனைவிக்குமிடையே நிலவி வந்த தகராறுகளைத் தீர்த்து, குடும்பத்தில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த தீவிர முயற்சியில் அனைவரும் ஈடுபட்டு வருவதாகவும் தெரிய வந்துள்ளது.

பிரான்ஸ் யுவதியுடனான உறவை நிறுத்திவிட்டு அவருக்குப் பணம் கொடுப்பதை நிறுத்தினால் மட்டுமே அவருடன் மீண்டும் குடும்ப வாழ்க்கை வாழ விரும்புவதாக குடு அஞ்சுவின் மனைவி கூறியதாகவும் தெரியவந்துள்ளது.

பிரான்ஸ் யுவதியுடனான தனது உறவை நிறுத்த முடியாதென சிறையிலுள்ள அஞ்சு தெரிவித்துள்ளார். இதேவேளை, அஞ்சுவுக்கு டுபாயில் தண்ணீர் போத்தல் தொழிற்சாலை, உடற்பயிற்சி மையம், உணவகம் மற்றும் கட்டட வளாகங்கள் உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

## நக்கல் நமசிவாயம்

**வெசாக் தானசாலைகளில் மக்கள் நீண்ட வரிசையில் மிக நீண்ட நேரமா நிற்கிறதப் பார்த்தன்... கோட்டாவுக்கு நன்றி சொல்லோணும்... அதுக்கு அவரின்ர ஆட்சியில தானே நல்ல ட்ரெயினிங் கிடைச்சுது..!**



## இன்றைய நாளில்...

- 1612 – கண்டி மன்னர் சௌரத்துடன் மார்செலஸ் சு டி பொசோடர் தலைமையிலான டச்சுத் தூதுக்குழு உடன்படிக்கையில் கையெழுத்திட்டது.
- 1874 – குதிரையால் செலுத்தப்படும் உலகின் முதலாவது பயணிகள் வண்டி மும்பை நகரில் (அன்றைய பம்பாய்) அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1919 – இலங்கையில் முதன்முதலாக உணவுக் கட்டுப்பாடு அமுலுக்கு வந்தது. அரிசிப் பயன்பாடு மாதமொன்றுக்கு சராசரியாக 30 ஆயிரம் தொன்னிலிருந்து 20 ஆயிரமாகக் குறைக்கப்பட்டது .
- 1933 – மகாத்மா காந்தி தனது சட்டமறுப்பு இயக்கத்தைக் கைவிட்டார்.
- 1985 – காரைக்குடியில் அழகப்பா பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது.

# 2025ஆம் ஆண்டு வரையில் டிப்போக்களுக்கு விசேட இலக்குகள்

## கட்டணம் வழங்கும் செயற்பாடுகள் இரு மாதங்களில் தொழில்நுட்ப மயப்படுத்தப்படும் என அமைச்சர் பந்துல அறிவிப்பு



இலங்கை போக்குவரத்து சபை, புகையிரத திணைக்களம் என்பன நீண்ட காலமாக நட்டத்தில் இயங்கிவருவதால், பொது போக்குவரத்து சேவை வீழ்ச்சியை சந்தித்துள்ளது. நெருக்கடி நிலைமையை வெற்றிக்கொள்வதற்காக 2025ஆம் ஆண்டாகும்போது நாடு முழுவதிலுமுள்ள சகல டிப்போக்களிலும் இலாபமடையும் நிறுவனமாக மாற்றியமைப்பதற்காக செயற்பட வேண்டியுள்ளது. அதற்காக சகல நிறுவனங்களுக்கும் இலக்குகளை பெற்றுக்கொடுக்கவுள்ளதுடன் எதிர்வரும் இரு மாதங்களில் பஸ் கட்டண விநியோகம், ஒதுக்கீடுகள், செயற்பாடுகளை தொழில்நுட்ப மயப்படுத்தவுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கை போக்குவரத்து சபை, புகையிரத திணைக்களம் என்பன நீண்ட காலமாக நட்டத்தில் இயங்கிவருவதால், பொது போக்குவரத்து சேவை வீழ்ச்சியை சந்தித்துள்ளது. இந்த நிலையினால், புதிய பஸ்களை பெற்றுக்கொள்ளல் அல்லது ஏனைய தேவைகளுக்காக ஒதுக்கீடு செய்வதற்கு போதியளவு நிதியில்லாத நிலை நிலவுகிறது. அதேபோன்று தற்போதுள்ள நிலைமையில், மேலும் கடன்களினூடாக சொத்துகளை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பும் எமக்கு இல்லை. மேலும், வீதி அபிவிருத்தி செயற்பாடுகள் உள்ளிட்ட ஏனைய செயற்பாடுகளுக்காக கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு கடன் உதவிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அந்த உதவிகளை மீளப் பெற்றுக்கொள்வதற்காக எமது நாட்டின் கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பிலான வேலைத்திட்டத்துக்காக சர்வதேச நாணய நிதியத்தினூடாக விசேட வேலைத்திட்டமொன்று முன்மொழியப்பட்டுள்ளது. அந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வரை நாடு இன்னுமொரு அடியைக் கூட எடுத்து வைக்க முடியாது. இந்த செயற்பாடுகளை வெற்றிகரமாக்கிக்கொள்வதற்காக இந்தியா, ஜப்பான், பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளின் ஒத்துழைப்புடன் விசேட பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாட்டில் நிலவும் இந்த நெருக்கடி நிலைமையை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். அதற்காக, சகலரும் பொருத்தமான வினைத்திறனுடன் செயற்படவேண்டிவரும். தற்போதுள்ள நிலைமையில் இந்த நெருக்கடியை வெற்றிக்கொள்வதற்காக 2025ஆம் ஆண்டாகும்போது நாட்டிலுள்ள சகல டிப்போக்களை இலாபமடையும் நிலைக்கு கொண்டுச் செல்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. அதற்காக ஒவ்வொரு நிறுவனத்துக்கும் புதிய இலக்குகள் பெற்றுக்கொடுக்கப்படும். தற்போது நிலவும் இலஞ்ச, ஊழல் மற்றும் செயலற்றத் தன்மை என்பவற்றை தவிர்த்துக் கொள்வதற்காக இன்னும் இரு மாதங்களில் டிக்கட் விநியோகம், ஒதுக்கீடுகள் உள்ளிட்ட சகல செயற்பாடுகளையும் தொழில்நுட்ப மயப் படுத்துவதற்கு தேவையாக செயற்பாடுகள் தற்போதைய நாட்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மிகவும் வினைத்திறனாக செயலாற்றி, தமது வருமானத்தை அதிகரித்துக்கொள்ள டிப்போக்களுக்கு அவர்களின் வருமானத்தில் புதிய பஸ்களை பெற்றுக்கொள்வதற்கு தேவையான வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கு தேவையான அமைச்சரவை பத்திரத்துக்கு அனுமதியை எதிர்காலத்தில் பெற்றுக்கொடுக்க எதிர்பார்த்துள்ளோம். முறையாக கொள்கைகள் இன்மையினால் அநேகமான அபிவிருத்தி நோக்கங்களினூடாக, எதிர்கால சந்ததியினருக்கு சரியான பலனை பெற்றுக்கொடுக்க முடியாமல் போயுள்ளது. நாடென்ற அடிப்படையில் முன்னோக்கிச் செல்ல வேண்டுமெனில், இதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட சிறந்த வேலைத்திட்டங்களை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவேண்டும். அதற்காக செயற்பட்டு நாட்டுக்காக செயலாற்றுவதற்காக நாம் அனைவரும் செயலாற்ற வேண்டும் என்றார்.

# சாரணர் இயக்கத்தினர் - ஜனாதிபதி லண்டனில் விசேட சந்திப்பு



ஐக்கிய இராச்சிய சாரணர் இயக்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட முடிசூட்டு விழா முகாமில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்ற இலங்கை சாரணர் இயக்கத்தின் சிரேஷ்ட மற்றும் பெண் சாரணர்களுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் (07) லண்டனில் இடம்பெற்றது.

முடிசூட்டு விழாவுக்கு இலங்கை சாரணர் இயக்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஷலினி பெரேரா, அரிதா பண்டார, அசேல பண்டார மற்றும் சரித் பெர்னாண்டோ ஆகிய சாரணர்கள் கலந்துகொண்டனர்.

அவர்களுடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, உலகளாவிய காலநிலை மாற்றம் உள்ளிட்ட தேசிய மற்றும் சர்வதேச நலன்களில் தீவிரமாக ஈடுபடுமாறு சாரணர்களை ஊக்குவித்தார்.

நாட்டின் எதிர்கால தலைமைத்துவத்தை பொறுப்பேற்க இளைஞர்கள் எவ்வாறு தயாராக இருக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி இங்கு மேலும் சுட்டிக்காட்டினார்.

இலங்கை சாரணர் இயக்கத்தின் பிரதம ஆணையாளர் சட்டத்தரணி ஜனபிரித் பெர்னாண்டோவின் வேண்டுகோளுக்கிணங்க இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

# குருநாகல் பானமுக அந்நூர் தேசிய பாடசாலைக்கு மூன்று மாடிக் கட்டடம்



(இக்பால் அலி)

குருநாகல், பானமுக அந்நூர் தேசிய பாடசாலையில் நிர்மாணிக்கப்படவுள்ள மூன்று மாடி வகுப்பறைக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டு விழா அண்மையில் இடம்பெற்றது.

குருநாகல் பானமுக அந்நூர் தேசிய பாடசாலையின் பழைய மாணவர்கள் மற்றும் ஊர் மக்களினால் 8 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்த புதிய மூன்று மாடி வகுப்பறைக் கட்டிடத்துக்கான அடிக்கல் நாட்டு விழா அதிபர் ஏ.எம். இர்சாட் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினர் எம்.எம்.தஸ்லீம் மற்றும் பானகமுவ முன்னாள் சமாதான அமைப்பின் தலைவர் ஏ.பீ.ஏ.மலீக் ஆகியோர்களுடன் ஊர் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இதில் கொழும்பு சாஹிராக் கல்லூரியின் உப அதிபரும் வளவாளருமான றஸீன் ஹஸனின் விசேட உரையும் பாடசாலை மாணவர்களின் விசேட கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் உப தலைவர் எம். எம். அஹ்மட் ரஸ்மி, செயலாளர், பாடசாலை அபிவிருத்தி குழு உறுப்பினர்கள், பாடசாலை பழைய மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். இக் கட்டிடத்தில் ஒரு கேட்போர் கூடமும் வகுப்பறைகளும் அமையப்பெறவுள்ளன.

# தென்மராட்சியில் 506 மாணவர்களுக்கு புத்தகப்பொதிகள் வழங்கிவைப்பு





(சாவகச்சேரி நிருபர்)

தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட 16 பாடசாலைகளைச் சேர்ந்த 506 மாணவர்களுக்கு திங்கட்கிழமை(08) காலை புத்தகப்பை மற்றும் கற்றல் உபகரணங்கள் ஆகியன வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

எல்.ஓ.எல்.சி நிறுவனத்தினரின் "வாழ்வின் சக்தி" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிள்ளைகளின் எதிர்காலத்தினை வளப்படுத்துவதற்காக மேற்படி உதவி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது தென்மராட்சியில் குறைந்த மாணவர்களைக் கொண்ட பின்தங்கிய 16 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு இவ் உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக மண்டபத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், எல்.ஓ.எல்.சி நிறுவன அதிகாரிகள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# வவுனியாவில் குளத்து நீரேந்து பிரதேசத்தை கையகப்படுத்தி வேலி அடைத்த விவகாரம்

## அகற்றுமாறு கட்டளை பிறப்பிப்பு

(வவுனியா நிருபர்)

2011ஆம் ஆண்டின் கமநல அபிவிருத்தி சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 2000ஆம் ஆண்டு 46ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 83ஆம் பிரிவின் பிரகாரம் பட்டானிச்சூர் புளியங்குளத்தின் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட வேலியினை அகற்றுவதற்கான கட்டளை வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் மாவட்ட பிரதி ஆணையாளரால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த கட்டளையில் பிறப்பிக்கப்பட்டுள்ளதாவது,

வவுனியா கோவில்குளம் கிராம நிலதாரி பிரிவில் அமைந்துள்ள பட்டானிச்சூர் கமநலசேவை நிலையத்தின் அதிகாரத்துக்குட்பட்ட பட்டானிச்சூர் புளியங்குளமானது கமநல அபிவிருத்தித் திணைக்களத்துக்கு சொந்தமான அளவை செய்யப்பட்டு எல்லைக்கற்கள் இடப்பட்டுள்ள குளமாகும்.

2013 ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம், 6ஆம் திகதி அரச விடுமுறை தினங்களில் (இரவு நேரத்தில்) பட்டானிச்சூர் புளியங்குளத்துக்குள் உள்நுழைந்து குளத்துக்குரிய ஒதுக்கீட்டுப் பிரதேசத்தில் விரோதமான முறையில் இனம் தெரியாதோர்களால் வேலி அடைக்கப்பட்டுள்ளதை அவதானிக்கப்பட்டுள்ளது. அதனால் 2011ஆம் ஆண்டின் கமநல அபிவிருத்தி சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 2000ஆம் ஆண்டு 46ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 38(4) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட்ட 83(1) இன் பிரகாரம் அடைக்கப்பட்டவர்களாலே சட்டவிரோதமாக அடைக்கப்பட்ட வேலியை 22.05.2023ஆம் திகதிக்கு முன்பு உடனடியாக அகற்றுமாறு கட்டளை இடப்படுகின்றது.



அவர்களால் அகற்ற தவறின் 22.05.2023ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு பின்னரான தினத்திலோ கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், கோவில்குளம் கமநல சேவை நிலையம் என்பவரால் பொருத்தமான நிறுவனங்களின் உதவியுடன் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் அதற்கு செலவான நிதி உரிய சட்டவிரோத வேலியடைப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட நபர்களிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவர், அரசாங்க அதிபர், கொழும்பு கமநல திணைக்கள ஆணையாளர் நாயகம், பொலிஸ் அத்தியட்சகர், பிரதேச செயலாளர் ஆகியோருக்கும் தகவல் வழங்கப்பட்டுள்ளதாகவும் கட்டிடங்கள் அனுமதி வழங்காமல் இருப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு வவுனியா நகரசபை செயலாளருக்கும் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வவுனியா பொலிஸ் நிலை பொறுப்பதிகாரிக்கும் குறித்த வேலியினை அகற்றுவதற்குரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு கமநல சேவை நிலையம் கோவிற்குளத்துக்கும் பட்டானிச்சூர்புளியங்குளம் கிராம சேவையாளருக்கும் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதாக வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் மாவட்ட பிரதி ஆணையாளர் தேவரதன் தெரிவித்துள்ளார்.

# மதவாச்சி றஷீத் பின் அப்தில்லாஹ் அரபுக் கல்லூரியின் பட்டமளிப்பு விழா







அநுராதபுரம், மதவாச்சி றஷீத் பின் அப்தில்லாஹ் அரபுக் கல்லூரியின் அல்-ஆலீம்களுக்கான 02ஆவது பட்டமளிப்பு விழா நேற்று முன்தினம் (07) மதவாச்சி, முகையதீன் ஜும்ஆப் பள்ளிவாசலில் நடைபெற்றது.

அரபுக் கல்லூரியின் தலைவர் சஹாப்தீன் மற்றும் அதிபர் அஷ்-ஷெய்க் பாயிஸ் (றஷாதி) தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் கலந்துகொண்டதுடன், விசேட பேச்சாளராக ஜம்இய்யத்துல் உலமா சபையின் பத்வா குழு உறுப்பினர் யஹ்யா (பலாஹி) சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில், கல்லூரியின் உபதலைவர் கலீலுல் ரஹ்மான் உள்ளிட்ட பல உலமாக்களும் புத்திஜீவிகளும் கலந்துகொண்டனர். இதன்போது, 15 மாணவர்களுக்கு அல்-ஆலிம் பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிற்றுக்கிழமை 2023.05.07
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5107
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 17,162,008.00
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 2 8 0 4 2 6

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3349
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 101,298,311.84
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 07 64 68 71

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1562
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,697,138.00
வெற்றி இலக்கினம்
வெற்றி இலக்கங்கள் 1 6 5 0 0 7

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1137
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 88,967,594.80
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கங்கள் 17 27 31 51

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 416
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,611,961.00
வெற்றி இலக்கினம் சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 07 23 38 46
விசேட இலக்கினம் சிம்மம்

மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1455
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 319,349,254.00
ஆங்கில எழுத்து T
சுப்பர் இலக்கம் 01
வெற்றி இலக்கங்கள் 02 45 67 79
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# தமிழர்களை அவர்களது தாயகத்திலிருந்தும் வெளியேற்றவா புத்த கோயில்கள் நிர்மாணம்?

## சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி



வடக்கின் பல பகுதிகளில் பல்வேறு யுக்திகளைக் கையாண்டு புதிதாகக் கட்டப்படும் புத்த கோயில்கள் தமிழர்களை அவர்களது தாயகப் பிரதேசத்திலிருந்தும் விரட்டியடிப்பதற்கான முயற்சியா என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

இலங்கை சுதந்திரமடைந்தபொழுது டொனமூர் அரசியல் சட்டம் அமுலில் இருந்தது. சிறுபான்மை இனத்துக்கு எதிராக எந்த சட்டமும் கொண்டுவரக்கூடாது என்று அந்த அரசியலமைப்பில் 29ஆம் சரத்தின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அந்த 29ஆவது சரத்து இருக்கத்தக்கதாகவே ஒட்டுமொத்த மலையக தமிழர்களின் வாக்குரிமையும் பறிக்கப்பட்டு அவர்கள் நாடற்றவர்களாக்கப்பட்டார்கள். மேலும் அவர்களது சிவில் அரசியல் சமூக உரிமைகளும் மறுதலிக்கப்பட்டன.

இதன் பின்னர், தென்பகுதியில் இருந்த தமிழ் மக்களின் வர்த்தகங்களை குறிவைத்து அவற்றை இல்லாமல் செய்து 1956இலும் 1977, 1981, 1983 போன்ற பல சந்தர்ப்பங்களில் தென்பகுதியில் இருந்த வடக்கு-கிழக்கு தமிழர்கள் மாத்திரமல்லாமல் மலையகத்தைச் சேர்ந்த தமிழ் மக்களும் அவர்களது தாயக பிரதேசமான வடக்கு-கிழக்குக்கு கப்பல் மூலமும் விமானம் மூலமும் அனுப்பிவைக்கப்பட்டனர்.

இப்பொழுது வடக்கு-கிழக்கைக் குறிவைத்து அங்குள்ள புராதன சைவ ஆலயங்களை உடைத்து, நீதிமன்ற உத்தரவுகளையும் மீறி, தான்தோன்றித்தனமான முறையில், தனிநபர்களின் காணிகளையும் கபளீகரம் செய்து, அவற்றில் புத்த கோயில்களைக் கட்டுவது மாத்திரமல்லாமல் அதனைச் சுற்றியுள்ள பலநூறு ஏக்கர் காணிகளையும் சுவீகரித்து அதற்கு இராணுவ பாதுகாப்பையும் வழங்கி தொடர்ச்சியாக சிங்கள குடியேற்றங்களையும் செய்து வருகின்றார்கள்.

இவ்வாறு யுத்தத்துக்குப் பின்னர், ஹம்பாந்தோட்டை போன்ற தூரப் பிரதேசங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட சிங்கள மக்களை வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் குடியேற்றி வருகின்றார்கள். கிழக்கில் ஏற்கனவே முக்கியமான பகுதிகளில் மிகப்பாரியளவிலான சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு புதிய சிங்கள பிரதிநிதித்துவங்களும் உருவாக்கப்பட்டுவிட்டன. இப்பொழுது வடக்கு மாகாணத்தில் மீண்டும் ஒருமுறை தமிழீழ கோரிக்கைக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படாமல் இருக்க வேண்டும் என்றால் வடக்கு மாகாணத்தின் மக்கள் தொகையில் 25வீதம் சிங்கள மக்களாக இருக்க வேண்டும் என அரச இராணுவ உயர் மட்டங்கள் முடிவெடுத்துச் செயற்படுகின்றன.

இதன் வெளிப்பாடாகவே வடக்கு-கிழக்கில் 1000 புத்தவிகாரைகளைக் கட்டுவதற்கு 2018ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்டத்தில் கோடிக்கணக்கான நிதியும் ஒதுக்கப்பட்டது. இதன் மூலம் வடக்கின் குடிசனப் பரம்பலை மாற்றி அவர்களது பாராளுமன்ற, மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைத்து வடக்கையும் ஒரு கலவர பூமியாக மாற்றி தமிழ் மக்களை அங்கிருந்தும் விரட்டுவதே மாறிமாறி ஆட்சிக்கட்டிலில் ஏறும் இலங்கை அரசின் நோக்கமாக இருக்கின்றது. ஏற்கனவே யுத்தத்தின் காரணமாக ஏறத்தாழ 1.5 மில்லியன் மக்கள் அவர்களது தாயகப் பிரதேசத்திலிருந்து விரட்டப்பட்டுவிட்டார்கள்.

இலங்கை அந்நிய ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை பெறவேண்டுமென்பதற்காக தமிழ் மக்களும் இன, மத பேதமின்றி போராட்டக்களத்தில் முன்னின்று போராடினார்கள். அந்தக் காலத்தில் தமிழ் மக்கள் தனிநாட்டுக்காகவோ அல்லது சுயாட்சிக்காகவோ போராடவில்லை. ஆனால் சுதந்திரமடைந்ததன் பின்னர், சிங்கள அரசியல் தலைமைகள் கொண்டுவந்த தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறை சட்டத்திட்டங்களும் மொழி, கல்வி, வேலைவாய்ப்பு, அபிவிருத்தி போன்றவற்றில் காட்டிய பாரபட்சமும் தமிழ் மக்களை அவர்களது சொந்தப் பிரதேசங்களில் இருந்து விரட்டி விவசாய அபிவிருத்தி என்ற பெயரில் அங்கு சிங்கள மக்களைக் குடியேற்றி தமிழ் மக்களின் இருப்பையும் அவர்களின் தனித்துவத்தையும் இல்லாமல் செய்வதற்கு முற்பட்டவையுமே தமிழ் மக்களை சுயாட்சிக்காகவும் பின்னர் தனிநாட்டுக்காகவும் போராடும் சூழ்நிலைக்குத் தள்ளியது.

இலங்கையின் தென்பகுதியில் இனமோதல்களை உருவாக்கி, தமிழர்களுக்கு அவர்களது தாயகப் பிரதேசமான வடக்கு-கிழக்குதான் பாதுகாப்பான பிரதேசம் என்ற அடிப்படையில் அவர்களை வடக்கு-கிழக்குப் பிரதேசத்துக்கு விரட்டியடித்ததுடன் அரசே கப்பல்கள் மூலம் தமிழ் மக்களை அப்பிரதேசங்களுக்கு அனுப்பியும் வைத்தது. இவ்வாறான நடவடிக்கைகள் அரசால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கை அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தினூடாக வலியுறுத்தப்பட்டதுமான எமது தாயகபூமியான வடக்கு-கிழக்கிலிருந்தும் அரசின் நடவடிக்கையினூடாக நாம் விரட்டியடிக்கப்பட்டால் நாம் எங்கே செல்வது?

உலகின் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமெனவும் சிறுபான்மை தேசிய இனங்கள் பாதுகாக்கப்படவேண்டும் எனவும் பழங்குடியின மக்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்றும் அழிவிலிருக்கின்ற உயிரினங்களும் தாவர இனங்களும் காப்பாற்றப்படவேண்டும் என்றும் குரலெழுப்பும் ஐ.நா. சபையும் சர்வதேச சமூகமும் இலங்கை அரசின் இவ்வாறான விடயங்களை கண்டுகொள்ளாமல் இருப்பதும் கண்டிக்காமல் இருப்பதும் இலங்கை அரசின் தமிழர் விரோத செயற்பாட்டுக்கு உலகநாடுகளும் ஐ.நா. சபையும் துணைபோகின்றதா என்ற அச்சத்தையும் கேள்வியையும் எழுப்பியுள்ளது.

இப்பொழுது, வடக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் எதிர்ப்பையும் மீறி, மிகப்பெருமளவிலான வேகமான சிங்கள பௌத்த மயமாக்கல் என்பது ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழ்த் தேசிய இனத்தின் தனித்துவம் காப்பாற்றப்பட வேண்டுமாக இருந்தால், அவர்களின் இருப்பு காப்பாற்றப்படவேண்டுமாக இருந்தால், அவர்களின் மொழி, கலாசாரம், பண்பாடு பாதுகாக்கப்பட வேண்டுமாக இருந்தால் அரசு தனது சிங்கள பௌத்த மேலாதிக்க சிந்தனைகளைக் கைவிட்டு சகல இனங்களும் இந்த மண்ணில் தமது சொந்தப் பிரதேசங்களில் அச்சமின்றி பாதுகாப்புடன் வாழும் சூழ்நிலையை ஏற்படுத்த சர்வதேச சமூகம் குரல் கொடுக்க வேண்டும்.

குறிப்பாக இந்தியா இந்த விடயங்களில் தனது தீவிர கவனத்தைச் செலுத்த வேண்டும் - என்று குறி[illegible]டுள்ளது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

## ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் மன்னார் விஜயம்

(மன்னார் நகர் நிருபர்)

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார நேற்றுமுன்தினம் (07) ஞாயிற்றுக்கிழமை மன்னார் மாவட்டத்துக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பின் பேரில், இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் விவசாய அமைப்பு, மீனவ சங்கப் பிரதிநிதிகள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், மகளிர் அமைப்புகளின் உறுப்பினர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடும் முகமாக குறித்த விஜயம் ஒழுங்கு செய்யப்பட்டு இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் ஓய்வுநிலை ஜெனரல் றனுல ராஜகருண, கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சின் இணைப்புச் செயலாளர் ரஞ்சித் குணரட்ன, பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் மாவட்ட இணைப்பாளர் தர்சின், ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட இணைப்பாளர் பஸ்மி உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் மன்னார் மாவட்டத்துக்கான பொதுக் குழு தெரிவும் இடம்பெற்றது.





## தொல்பொருளுடன் மூவர் மன்னாரில் கைது

(மன்னார் நகர் நிருபர்)



தொல்பொருள் என சந்தேகிக்கப்படும் பொருள் ஒன்றுடன் இரு பெண்கள் உட்பட மூவர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மன்னார் பாலம் சோதனை சாவடியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் எருக்கலம்பிட்டி பகுதியைச் சேர்ந்த மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்றைய தினம் மன்னார் பாலம் பிரதான சோதனைச் சாவடியில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை நடவடிக்கையின்போது தொல்பொருள் என சந்தேகிக்கப்படும் சிறிய அளவிலான பொருள் ஒன்றை தம் உடைமையில் வைத்திருந்ததன் அடிப்படையில் குறித்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மூவரையும் சந்தேகத்தின் பெயரில் கைது செய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## வட்டவளையில் தொழிலாளர்களுக்கு சலுகைகள் மறுப்பு

(கினிகத்தேனை செய்தியாளர்)

வட்டவளை லோனக் பாற்பண்ணையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் மற்றும் அத்தோட்டத்திலுள்ள ஏனைய தொழிலாளர்களுக்கும் தோட்ட நிர்வாகத்தினால் வழங்கப்படும் சலுகைகள் அனைத்து நிறுத்தப்பட்டுள்ளதாக தொழிலாளர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

குறித்த தோட்ட பாற்பண்ணையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு விபத்தின் போது வழங்கப்படும் சலுகையான வாகன வசதி, அவசர தேவை கருதி வழங்கப்படும் வாகன வசதி ஆகியவை தற்போது நிறுத்தப்பட்டுள்ளதாக தொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனடிப்படையில், தமக்கு வழங்கப்படுகின்ற சலுகைகள் நிறுத்தப்பட்டுள்ளது குறித்து கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலில் சில குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற கருத்து மோதலில் ஒருவர் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தவிரவும், தமக்கு முறையான தீர்வு கிடைக்காதபட்சத்தில் அடுத்த கட்டமாக சில தீர்மானங்கள் எடுக்கவிருப்பதாகவும் குறித்த தோட்டத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## சமூக சேவையாளர்கள் கண்டியில் கௌரவிப்பு

(கண்டி செய்தியாளர்)



மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் பல்வேறு சமூக நலப் பணிகளில் நீண்டகாலமாக ஈடுபட்டு வரும் அப்துல் கலாம் ஞாபகார்த்த உலகளாவிய அறக்கட்டளையினால் கண்டியில் நடத்தப்பட்ட வைபவம் ஒன்றின்போது அதன் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட பல பெருந்தகைகள் அண்மையில் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

கண்டி ரோயல் கெண்டியன் ஹோட்டலில் இடம்பெற்ற இவ்வைபவத்தில் மத்திய மாகாண ஆளுநரின் செயலாளர் திருமதி மஞ்சுலா மடஹபொல, கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன், கண்டி மாவட்ட பிரதி செயலாளர் உத்பலா ஜயரத்ன உட்பட பலர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

அப்துல் கலாம் ஞாபகார்த்த உலகளாவிய அறக்கட்டளையின் கண்டிக்கிளைத் தலைவர் தேசாபிமானி என் கருணாகரன் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

நாட்டில் கடந்த காலங்களில் ஏற்பட்ட கொவிட் பெருந்தொற்றின் போது முடக்கப்பட்டிருந்த மக்களின் ஒரு பகுதிக்கு உலருணவுப் பொதிகளை இவ் அமைப்பு வழங்கியது.

அதேபோல் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு உலருணவுப் பொருட்களை வழங்குதல், பிரசவத்துக்காகக் காத்து நிற்கும் வசதி குறைந்த கண்டி மஹய்யாவப் பிரதேச பெண்களுக்கு சிசு மற்றும் குழந்தை பராமரிப்பு உபகரணங்கள் வழங்குதல் போன்ற பல பொதுப் பணிகளை அவ்வப்போது வழங்கியுள்ளது.

அத்துடன் பெருந்தோட்டப் பகுதி வசதி குறைந்த மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்குதல், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பெருந்தோட்டப் பகுதி மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்குதல், கண்டி மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு சில அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்தல், இலவச மூக்குக் கண்ணாடி வழங்குதல் முதலான பல்வேறு சமூகநல நடவடிக்கைகளில் இவ் அமைப்பு ஈடுபட்டு வந்துள்ளது.

மேற்படி அமைப்பின் வளர்ச்சிக்கு பாடுபட்ட பலர் இவ் வைபவத்தில் பாராட்டப்பட்டனர்.

அமைப்பின் உபதலைவர்களான பாலகிருஷ்ணன் கிருசாந்தி, செல்வம் பாஸ்கரன், அமைப்பின் மாகாணப் பணிப்பாளர்களான முருகேசு(மத்திய மாகாணம்), ஜோன் நிக்கலஸ் (ஊவா மாகாணம்), பெருமாள் திருச்செல்வன்(வடக்கு மாகாணம்) காரியப்பர் மொகமட் ரூமி (கிழக்கு மாகாணம்) ஆகியோர் உட்பட பலர் கௌரவிக்கப்பட்டனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com





மாத்தளை விபுலானந்தா கலா மன்றத்தின் ஏற்பாட்டில் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

# தர்கா நகரில் வருடாந்த பரிசளிப்பு விழா





தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்காக புனித ரமழான் மாதத்தில் நடத்தப்பட்ட விசேட வழிகாட்டல் போட்டிப் பரீட்சை மற்றும் வினா விடைப்போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் தர்கா நகர் ஏஸியம் கல்வியகத்தில் மத்துகம, அன்னாசிகல தமிழ் வித்தியாலய அதிபர் மொஹமட் றிப்கான் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட வைத்திய கலாநிதி எம்.கே.எம். றியாஸ் சமகால மாணவர்களும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையும் தொடர்பில் மாணவர்களுடனான விசேட கலந்துரையாடலை மேற்கொண்டார்.

சிறப்பு அதிதிகளாக அஷ்ஷெய்க் றிழா (நளீமி), மத்துகம, தேவகொட ஆரம்பப் பாடசாலை அதிபர் சீ.எம்.ரீ. சந்தஹஸ் , வெலிப்பென்ன ரஹ்மானியா தேசிய பாடசாலை விஞ்ஞான பாட ஆசிரியை எம்.என். நுபைலா, சமூக சேவகர் எம்.எஸ்.எம். றிப்கான் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

விசேட போட்டிப் பரீட்சையில் 189 புள்ளிகள் பெற்ற தர்கா நகர் அல் ஹம்றா மகா வித்தியாலய மாணவி ஆர்.ஏ.எப். ரஹ்மா மற்றும் வினா விடைப்போட்டியில் அதிகூடிய புள்ளிகள் பெற்ற அளுத்கம முஸ்லிம் மகளிர் கல்லூரி மாணவி எம்.எப்.எப். றிக்ஸா ஆகியோர் பிரதம அதிதியால் கிண்ணங்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இதேவேளை தர்கா நகர், பேருவளை மற்றும் மத்துகம பிரதேச பாடசாலை மாணவர்கள் பங்குபற்றியிருந்த இப்போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டிய மற்றும் பங்குபற்றிய மாணவர்களுக்கும் பணப்பரிசுகளும் ஆறுதல் பரிசுகளும் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



பாணந்துறை அருள்மிகு கந்தசாமி ஆலய தேர்த்திருவிழா அண்மையில் இடம்பெற்றது . ஆலய மஹோற்சவ குருக்கள் "கிரியா க்ரம ஜோதி" சிவஸ்ரீ இலக் ஷமிகாந்த ஜெகதீசக் குருக்களின் வசந்த மண்டப பூஜையையடுத்து வள்ளி தெய்வானை சமேத ஆறுமுகப்பெருமான் தேரில் புறப்பட மங்கள வாத்தியங்கள் முழங்க உள்வீதி வலம் வருவதையும் ஆறுமுகப்பெருமானுக்கு அர்ச்சனை செய்வதையும் பக்தர்கள் சூழ பெருமான் நகரவீதிவலம் வருவதையும் காணலாம்.

# பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் நிறைவேறினால் பேசாமல் இருப்பவர்களும் கைது செய்யப்படலாம்

## ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா கூறுகிறார்



பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டால் பேசினாலும் பேசாமல் இருந்தாலும் கைது செய்யப்படலாம் என ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா தெரிவித்தார்.

யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை இடம்பெற்ற உழைக்கும் மகளிர் அமைப்பின் மகளிர் தின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத சட்டத்தை விடவும் மோசமானதொன்றாகவே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அமையும்.பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் ஒரு மனிதன் நடமாடும் சுதந்திரத்தை பறிப்பதாக அமைவதோடு ஊடகங்களை அடக்குவதாகவும் அமைகிறது. அதாவது ஒருவர் பேசினாலும் கைது செய்யப்படலாம், பேசாமல் இருந்தாலும் கைது செய்யப்படலாம் என்பதற்கு உதாரணம் ஒன்றை கூறுகிறேன்.ஒருவர் பொது வெளியில் பேசிய விடயங்களை அரசுக்கு எதிரானது எனக் கூறி அவரை கைது செய்ய முடியும். அவ்வாறு ஒருவர் பேசியதை கேட்டுக் கொண்டிருந்தவரையும் அரசுக்கு எதிராக தூண்டப்படுகிறார் எனக் கூறி அவரையும் கைது செய்ய முடியும்.ஒருவர் கூறிய விடயத்தை அச்சு ஊடகங்களில் எழுதுவதோ இலத்திரனியல் ஊடகங்களில் பதிவிடுவதோ அல்லது தொலைக்காட்சிகளில் ஒளிபரப்புவதையோ அரசுக்கு எதிரான செயற்பாடு எனக் கூறி கைது செய்ய முடியும்.ஏனெனில் பயங்கரவாதம் என்பதற்கு சரியான விளக்கங்களோ அல்லது வரையறைகளோ இதுவரை குறிப்பிடப்படவில்லை.அரகல போராட்டத்துக்கு பின்னர் இனியொரு வலுவான போராட்டம் இடம்பெறுவதைத் தடுக்கும் முகமாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.தற்போது உள்ள பயங்கரவாத சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவரை 18 மாதங்கள் தடுத்து வைத்திருக்க முடிவதோடு பிணை வழங்குவதானால் சட்டமா அதிபரிடம் அனுமதி பெறப்பட வேண்டும்.ஆனால் தற்போது தயாரிக்கப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தில் மூன்று மாதங்கள் தடுத்து வைக்கப்படுவதோடு நீதவான் நீதிமன்றத்தால் பிணை வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 18 மாதங்களாக தடுத்து வைக்கப்படுவதை மூன்று மாதங்களாக புதிய சட்டமூலத்தில் கூறப்பட்டாலும் வழக்குத் தாக்கல் தொடர்பில் சுமார் 20 வருடங்கள் வரை சட்டமா அதிபர் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யாமலே இழுத்தடிக்க முடியும்.புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தில் கைது செய்யப்படும் ஒருவர் அந்தப் பிரதேசத்தின் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் ஒப்புதலுடன் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லாமல் மூன்று மாத தடுப்புக் காவலில் வைத்திருக்க முடியும்.மேலும் நீதிமன்றத்துக்கு உரிய அதிகாரங்கள் சில ஜனாதிபதியின் அதிகாரங்களுக்கு உட்பட்டதாக புதிய சட்டமூலத்தில் வெளி வர உள்ளது.அதாவது நாட்டுக்குள் செயல்படும் தனி நபர்களை அல்லது குழுக்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கும் நிதிகளை முடக்குவதற்கும் உத்தரவிடும் அதிகாரம் நீதிமன்றங்களில் இருந்து நிறைவேற்று ஜனாதிபதியின் கைகளுக்கு செல்கிறது.ஒரு தனி மனிதன் நாட்டுக்குள் நடமாடும் சுதந்திரத்தை ஒரு குறிக்கப்பட்ட பிரதேசத்துக்குள் நடமாடும் சுதந்திரம் அல்லது வெளிநாட்டுக்கு செல்வதையோ ஜனாதிபதி நினைத்தால் தடுப்பதற்குரிய அதிகாரம் புதிய சட்ட மூலத்தில் வகுக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் நாட்டினுடைய நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ யார் என்ன சொன்னாலும் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தை நிறைவேற்றுவோம் எனக் கூறுகிறார்.அவரின் கருத்தை பார்க்கும் போது நல்லாட்சி அரசாங்கத்தில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க பயங்கரவாதச் சட்டத்தை முற்றாக நீக்குவேன் என சர்வதேசத்திடம் வாக்குறுதியளித்த நிலையில் தற்போது புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட வரைபை தயாரித்தவர்களுள் ஒருவரான நீதி அமைச்சர் விஜயதாச நிறைவேற்றுவேன் எனக் கூறும் போது ஜனாதிபதி மௌனமாகவே உள்ளார்.இவர்களுக்கு ஆட்சி அதிகாரம் தொடர்ச்சியாக தங்களிடமே இருக்க வேண்டும் என்பதில் கவனமாக உள்ள நிலையில் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் நிறைவேறுகிறதோ இல்லையோ தற்போது நடைமுறையில் இருக்கும் பயங்கரவாத சட்டத்தை தொடர்ந்தும் வைத்திருக்க வேண்டும் என்ற மனோநிலையில் உள்ளனர்.ஆகவே பல்வேறு ஆபத்துக்கள் நிறைந்த புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தை தோற்கடிப்பதற்கு தென் இலங்கை மக்களும் தயாராக உள்ள நிலையில் சிறுபான்மை மக்களும் அதற்கு ஆதரவாக செயல்படுவதே காலத்தின் கட்டாயம் எனவும் தெரிவித்தார்.





கொழும்பு கம்பன் கழகம் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷனில் நடத்திய ஆடல் வேள்வி 2023 நிகழ்வின் இறுதிநாள் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (07) மாலை நடைபெற்றது. அதன்போது இடம்பெற்ற கலை நிகழ்வுகளையும் கலந்து கொண்ட பிரமுகர்களையும் காணலாம்.

## ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு



(பேருவளை செய்தியாளர்)

பேருவளை, சீனன் கோட்டை அல் ஹுமைஸரா தேசிய பாடசாலையில் நீண்ட காலம் ஆசிரியர் பணிபுரிந்த முஹம்மத் ஜய்னுலாப்தீன் பௌஸிக் 32 வருட கால ஆசிரிய சேவையிலிருந்து மே 02ஆம் திகதி ஓய்வுபெற்றார்.

09.01.1991ஆம் ஆண்டு ஆசிரிய சேவையில் இணைந்துகொண்ட அவர் மூதூர் மத்திய கல்லூரி, பேராத்துவெளி மத்திய கல்லூரி, கந்தளாய் அல் தாரிக் ஆகிய பாடசாலைகளில் கடமையாற்றி இறுதியாக பேருவளை, சீனன் கோட்டை அல் ஹுமைஸரா தேசிய பாடசாலையில் 23 வருடங்கள் கடமையாற்றினார்.

தனது காலப்பகுதியில் பாடசாலையின் உதவி அதிபர் மற்றும் தரம் 8 மற்றும் 9 வலய தலைவராகவும் இறுதிவரை கடமை புரிந்தார். இக்காலத்தில் பாடசாலைகளின் பல அடைவுகளுக்கும் சாதனைகளுக்கும் உந்துசக்தியாக காணப்பட்டார்.

தனது சேவைகாலத்தில் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்காகவும் பாடசாலையின் முன்னேற்றத்துக்காவும் தியாக உணர்வுடன் பணிசெய்தார். ஒரு ஆசிரியரிடத்தில் இருக்க வேண்டிய அத்தனை பண்புகளும் இவரிடம் காணப்பட்டது. அதனால் அவர் அனைவரினதும் நன்மதிப்பையும் பெற்றுக் கொண்டார்.

# ஷாதுலிய்யா மனாகிப் மஜ்லிஸ்

(பேருவளை செய்தியாளர்)

பேருவளை , மருதானை மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசலுடன் இணைந்த ஷாதுலிய்யா ஸாவியாவில் 156 ஆவது வருட ஷாதுலிய்யா மனாகிப் மஜ்லிஸின் ஆரம்ப வைபவம் எதிர்வரும் 12 ஆம் திகதி மாலை மஃரிப் தொழுகையுடன் நடைபெறும்.

கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எம்.ஐ.எம் ரபீக் (பஹ்ஜி) தலைமையில் நடைபெறும் இம்மஜ்லிஸின் ஆரம்ப தின நிகழ்வில் கொழும்பு பெரிய பள்ளிவாசல் கதீப் கலீபதுஷ் ஷாதுலி மௌலவி அஸ்ஸெய்யித் அலவி ஸாலிஹ் மௌலானா (அல் முர்ஸி) விசேட சொற்பொழிவாற்றுவார். ஷாதுலிய்யா தரீக்காவின் ஸ்தாபகர் அல் குதுபுல் அக்பர் இமாம் அபுல் ஹஸன் அலியுஷ் ஷாதுலி (ரலி) அவர்களின் 850 ஆவது வருட ஜனன தினத்தை முன்னிட்டும் ஷாதுலிய்யா தரீக்காவின் ஏனைய மஷாயிஹ்மார்களின் ஞாபகார்த்தமாகவும் மேற்படி மனாகிப் மஜ்லிஸ் 156 ஆவது வருடமாகவும் நடைபெறுகிறது.

12 ஆம் திகதி ஆரம்பமாகும் இம்மஜ்லிஸ் 21 ஆம் திகதி தமாம் செய்யப்படும். தமாம் மஜ்லிஸில் ஷாதுலிய்யா தரீக்காவின் இலங்கைக்கான கலீபதுல் குலபாவும் காலி மாவட்ட ஜம்மிய்யதுல் உலமா சபையின் தலைவருமான சங்கைக்குரிய மௌலவி முஹம்மத் ஸுஹ்ர் ஆலிம் (பாரி) விசேட சொற்பொழிவாற்றவுள்ளதாக ஸாவியா தர்மகர்தாக்களுள் ஒருவரான எம்.எம் பயாஸ் தெரிவித்தார்.

ஷாதுலிய்யா உலக ஆன்மிகத் தலைவர் சங்கைக்குரிய ஷேகு ஸஜ்ஜாதா அஷ் ஷெய்க் முஹம்மத் மஹ்தி அப்துல்லாஹ் அல் பாஸி அல் மக்கி அஷ் ஷாதுலி அவர்களால் இலங்கைக்கான ஷாதுலி தரீக்காக்கான கலீபதுல் குலபாவாக நியமிக்கப்பட்டுள்ள மௌலவி முஹம்மத் ஸுஹ்ர் ஆலிம் (பாரி) அவர்களுக்கு இதன்போது வரவேற்பளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## நாணய மாற்று வீதம் (08.05.2023)

ஸ்ரீ லංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 209.9038 | 222.3153 |
| கனேடியன் டொலர் | 231.7183 | 245.5667 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 44.3414 | 47.8233 |
| யூரோ | 343.5567 | 361.7984 |
| ஜப்பான் யென் | 2.3104 | 2.4309 |
| சிங்கப்பூர் டொலர் | 234.5986 | 247.7361 |
| ஸ்ரேலிங் பவுன் | 393.8767 | 414.0478 |
| சுவிஸ் பிராங் | 347.8153 | 369.2725 |
| ஐ.அ. டொலர் | 312.1955 | 326.3198 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 847.2722 |
| குவைட் | குவைட் தினார் | 1,042.9083 |
| ஓமான் | ஓமான் றியால் | 829.6785 |
| கட்டார் | கட்டார் றியால் | 87.6531 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85,1802 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 86.9895 |





கொழும்பு, கல்கிஸ்ஸை சென்.தோமஸ் கல்லூரியின் 2023 ஆம் ஆண்டுக்கான தமிழ் நாடக மன்றம் நடத்திய நாடக விழா கல்லூரியின் பிரதான மண்டபத்தில் 06ஆம் திகதி கல்லூரியின் நாடக மன்ற பொறுப்பாசிரியர்களான ஜி. நேசசீலன், திருமதி எஸ். வதனதாசன் ஆகியோரின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. இவ்விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட ஜனனம் அறக்கட்டளையின் தலைமை அறங்காவலர் கலாநிதி வி.ஜனகன் நாடகப் போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கேடயங்களையும் சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார்.இவ்விழாவில் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் என பலர் கலந்து கொண்டனர்.

# கிழக்கு ஆளுநர் அலுவலகம் நடத்திய தர்ம சக்தி பூஜை







தேசிய மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கான பொது மாநாடு மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் இணைந்து நடத்திய தர்ம சக்தி பூஜை மற்றும் வெசாக் விழா வெள்ளிக்கிழமை (05) திருகோணமலை கடற்கரை வளாகத்தில் இடம்பெற்றது.

திருகோணமலை ஜயசுமணராம விகாரையில் இருந்து புனித தூபிகள் விசேட வாகன ஊர்வலம் மூலம் கோட்டை சங்கமித்த பௌத்த நிலையத்துக்கு எடுத்து வரப்பட்டு பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பௌத்த மத குருமார், கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்நாயக்க, ஆளுநரின் செயலாளர் எல்.பி.மதநாயக்க, திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜெயவிக்ரம, மாகாண கல்வி அமைச்சு, விவசாய அமைச்சு, காணி அமைச்சு, விளையாட்டு அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் முப்படைகள், பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினர் எனப்பலர் கலந்து கொண்டனர்.

அத்துடன் சகோதரத்துவத்தின் வெசாக் வலயம், கலைக் கண்காட்சி மற்றும் பக்திப் பாடல் நிகழ்ச்சிகள் என்பன அன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



**அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் ஆலோசகரான அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக அண்மையில் கடமையேற்ற வைத்தியர் ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.ராஜாவை பாராட்டி பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு ஒலுவில் கிறீன் விலாவில் ஞாயிற்றுக்கிழமை(07) இடம்பெற்றது. (அட்டாளைச்சேனை மேலதிக செய்தியாளர்)**




**"மாணவர்களுக்கு சுகாதாரமான சுற்றுச்சூழலை உருவாக்குவோம்" எனும் தொனிப்பொருளில் கல்முனை நகர், இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயத்தில் சிரமதான நிகழ்வொன்று அதிபர் எம்.ஜி.எம். றிசாத் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சமுர்த்திப் பயனாளிகள், பாடசாலை அபிவிருத்திகுழு உறுப்பினர்கள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர். (மாளிகைக்காடு செய்தியாளர்)**





**திருகோணமலை புனித மரியாள் கல்லூரியில் ஒழுங்கமைக்கப்பட்ட முதலாவது பசுமை வகுப்பறை அதிபரிடம் வியாழக்கிழமை(04) கையளிக்கப்பட்டது. இத்திட்டம் வன்னி ஹோப் நிறுவனத்தினூடாக தேவ் - லலிதா மகாதேவன்(அவுஸ்திரேலியா) நிதி பங்களிப்போடு Trinco Aid நிறுவனம் செயற்படுத்தியது. பசுமை வகுப்பறை என்பது நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக வடிவமைக்கப்பட்ட கற்றல் சூழலாகும். (கிண்ணியா செய்தியாளர்)**

# அல்குர்ஆனை மனனம் செய்த மாணவிகளுக்கு கௌரவம்





**(பாலமுனை செய்தியாளர்)**

பாலமுனை மஹாஸினுல் உலூம் பெண்கள் அறபுக் கல்லூரியில் அல்குர்ஆனை மனனம் செய்த 06 மாணவிகளையும் பாராட்டி நினைவுச்சின்னம் மற்றும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு சனிக்கிழமை(07) பாலமுனை ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் மண்டபத்தில் இடம்பெற்றது.

பாலமுனை மஹாஸினுல் உலூம் பெண்கள் அறபுக் கல்லூரி அதிபர் அஷ்-ஷெய்க் ரீ.நிஸ்தார் நஹ்ஜி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பாலமுனை ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் தலைவர் யூ.எல்.அப்துல் லத்தீப், மஹாஸினுல் உலூம் அறபுக் கல்லூரி தலைவர் ஏ.ஆதம்பாவா உட்பட ஆசிரியர்கள், பெற்றோர், நிர்வாகிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது அல்குர்ஆனை முழுமையாக மனனம் செய்து முடித்த உவைஸ் அப்ரா, முஹம்மது றியாஸ் பாத்திமா சீனூ, ஆதம் லெப்பை பாத்திமா ஹனா, இல்முதீன் பாத்திமா நுஸ்கா, முஹாஜிரீன் சிஹ்லாஸ் றிதா, முஹம்மத் றமீஸ் பாத்திமா ஷேபா ஆகிய மாணவிகள் பாராட்டி பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதுவரை இக்கல்லூரியில் 13 ஹாபி ழாக்கள் அல்குர்ஆனை மனனம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



**ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு கோழிக்குஞ்சுகள் வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை (08) பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போது தெரிவு செய்யப்பட்ட 25 பயனாளிகளுக்கு தலா 25ஆயிரம் ரூபா பெறுமதியான கோழிக் குஞ்சுகள், மருந்துப்பொருட்கள் மற்றும் கோழித் தீவனம் என்பனவும் வழங்கப்பட்டன. (வாழைச்சேனை செய்தியாளர்)**

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்



**(மாளிகைக்காடு செய்தியாளர்)**

மாணவர்களின் கல்விக்கு வறுமை தடையாக அமையக்கூடாது என்ற நோக்கில் இணைந்த கரங்கள் அமைப்பினால் அம்பாறை, திருக்கோவில் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் கற்கும் தொழில் வாய்ப்பற்ற குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அந்தவகையில் ஊறணி சரஸ்வதி மகா வித்தியாலயத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 60 மாணவர்களுக்கும் பொத்துவில் இன்ஸ்பெக்டர் ஏத்தம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 50 மாணவர்களுக்கும் அமைப்பின் இணைப்பாளர்களான லோ.கஜரூபன், எஸ்.காந்தன், சி.துலக்சன், மா.ஜெயநாதன், தி.சதிஸ்குமார் ஆகியோரால் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் ஏத்தம் இன்ஸ்பெக்டர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் க. சந்திரகாசன், ஆசிரியர் க. கருணாகரன், பெற்றோர் மற்றும் மாணவர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# தாண்டியடியில் மும்மொழிக் கதம்பம்



**(கல்லடி செய்தியாளர்)**

மட்டக்களப்பு, மண்முனை மேற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட தாண்டியடி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் மும்மொழிக் கதம்ப நிகழ்வு புதன்கிழமை (03) பாடசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அதிபர் தி.பத்மசுதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகேந்திரகுமார், விசேட அதிதிகளாக மண்முனை மேற்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.முருகேசப்பிள்ளை, பாடசாலை மேம்பாட்டு இணைப்பாளர் கே.சிறிபிரேமசாயிசிவம், ஏயூலங்கா நிறுவன திட்ட இணைப்பாளர் ஏ.அனுலா, மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய தமிழ்ப் பாட ஆசிரிய ஆலோசகர் பி.சதீஸ்குமார், ஆங்கிலப்பாட வளவாளர் ஜி.ஜுட்ஸ்குமார், சிங்கள பாட ஆசிரிய ஆலோசகர் எஸ்.மாணிக்கவாசகம், ஆலோசனை வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் ரி.குணரெத்தினம், ம.சதீஸ்குமார், மண்முனை மேற்கு பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனத் தலைவர் ம.சதீஸ்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பாடசாலை ஆலோசனை மற்றும் வழிகாட்டல் பொறுப்பாசிரியர் ரோஜாரமணி இருதயநாதனின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளில் ஒரே நேரத்தில் போட்டிகள் நடத்தப்பட்டு, இப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்கள் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மேலும், மாணவர்களின் மும்மொழியிலான பல்வேறு கலை நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன.

ஏயூலங்கா நிறுவனத்தின் நிதி அனுசரணையில் மண்முனை மேற்கு பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளன ஒத்துழைப்புடன் இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நெற்செய்கையில் படைப்புழுத் தாக்கம்

**(கிரான் செய்தியாளர்)**

வாழைச்சேனை, கிரான் கமநல சேவைப் பிரிவுக்குட்பட்ட சேம்பையடி, தவணை கண்டத்திலும் கட்டுக்காட்டு, சோலையமடு கண்டத்திலும் செய்கை பண்ணப்பட்டுள்ள சிறுபோக நெற்செய்கை படைப்புழுத் தாக்கத்துக்குள்ளாகியுள்ளது.

படைப்புழுவானது, இளம் பயிர்களின் இலைகளை முழுமையாக உண்பதுடன் முதிர்ச்சியடைந்த பயிர்களின் தண்டு பகுதியைத் தவிர்த்து இலைப்பகுதியை உண்டு பின் வயலில் உள்ள களைகளுக்குள் பரவி களைகளையும் உண்கின்றது. இப் புழுவின் தாக்கத்தினால் நெற் பயிர்கள் நில மட்டத்துடன் போகிறது.

இதனால் பயிர்களின் வளர்ச்சி குன்றி காணப்படுவதுடன் அறுவடை காலமும் பின் செல்கின்றது.

இதனால் தாங்கள் பாரிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுப்பதாகவும் களை நாசினிகளின் விலையேற்றத்தை ஈடு செய்யமுடியாது என்றும் கடன்களைப் பெற்று களைநாசினிகள் தெளித்தும் புழுவின் தாக்கம் குறையவில்லையெனவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.



# நீர்நிலைகளில் நீராடுவதை தவிர்த்துக்கொள்ளவும்

(பாண்டிருப்பு செய்தியாளர்)

சித்திரை வசந்த காலத்தையிட்டு பெருமளவான வெளிநாட்டு, உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் இங்குள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை பார்வையிடும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், சிலர் கூட்டாகச் சென்று கடல், ஆறு, நீர்வீழ்ச்சி மற்றும் குளம் ஆகிய ஆபத்தான நீர்நிலைகளில் நீராடி வருகின்றனர். இதன் காரணமாக பலர் உயிரிழந்துமுள்ளனர்.

இது ஆபத்தான இடம், எச்சரிக்கை என அறிவித்தல் போடப்பட்ட இடங்களிலும் எல்லை மீறி நீராடுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. சுற்றுலாப் பயணங்களை மேற்கொள்பவர்கள் தங்களது உயிரை பாதுகாத்து கொள்வதற்கு ஆபத்தான நீர் நிலைகளில் நீராடுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என உயிர் பாதுகாப்புக் குழுவினர் கோரிக்கை விடுத்துள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு, சவுக்கடி கடலில் நீராடிய இரு மாணவர் நீரில் மூழ்கி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு. சிறுவர் பராமரிப்பு நிலைய இரு சிறுமிகள் தப்பியோட்டம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள சிறுவர் பராமரிப்பு சீர்திருத்த நிலையம் ஒன்றிலிருந்து 14 மற்றும் 13 வயதுகளையுடைய இரு சிறுமிகள் திங்கட்கிழமை (08) அதிகாலை தப்பியோடியுள்ளதாக கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்டத்தில் சிறுவர் திருமணம் மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சிறுமிகளை சீர்திருத்துவதற்காக நீதிமன்றத்தினால் சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கு அனுப்பப்படும். இந்நிலையில், நீதிமன்றினால் குறித்த சிறுவர் பராமரிப்புக்காக அனுப்பப்பட்ட வாழைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த 14 வயது சிறுமியும் ஏறாவூரைச் சேர்ந்த 13 வயது சிறுமியும் பராமரிக்கப்பட்டுவந்த நிலையில், சம்பவதினம் அதிகாலை 2.30 மணியளவில் அங்கிருந்து தப்யோடியுள்ளதாக பராமரிப்பு நிலையத்தினர் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்குவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அரிய இன கருங்கோழி குஞ்சுகள் வழங்கல்



(பாலமுனை செய்தியாளர்)

அம்பாறை மாவட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வேலைத்திட்டத்துக்கு அமைவாக அக்கரைப்பற்று தக்வா ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாகத்தினரால் பண்டைய கால அரிய இன கருங்கோழி குஞ்சுகளை இலவசமாக வழங்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, பாலமுனை பிரதேச வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரி சிரேஷ்ட வைத்தியர் எம்.ஜே.எம்.நௌபலின் வேண்டுகோளுக்கமைவாக பாலமுனை பிரதேச வைத்தியசாலை வளாகத்தில் அமைந்துள்ள உள நல இடைத்தங்கல் புனர்வாழ்வு நிலையத்துக்கு அக்கரைப்பற்று தக்வா ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாகத்தினரால் கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் திட்ட இணைப்பாளரும் அக்கரைப்பற்று பிரதேச செயலக சமூர்த்தி முகாமையாளருமான என்.ரீ.மசூர், பாலமுனை பிரதேச வைத்தியசாலை தாதிய பரிபாலகர் ஐ.ஜலால்தீன் உட்பட தக்வா ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

அக்கரைப்பற்று, கல்முனை, இறக்காமம், அட்டாளைச்சேனை, பொத்துவில் மற்றும் ஆலையடிவேம்பு ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் இவ்வேலைத்திட்டங்கள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பச்சை மிளகாய் விலை வீழ்ச்சி

## நியாயமான விலையை பெற்றுத்தர கோரிக்கை



(மண்டூர் செய்தியாளர்)

மட்டக்களப்பு, களுதாவளை பிரதேசத்தில் பச்சை மிளகாயின் மொத்த விலை குறைந்துள்ளதாக மிளகாய் செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அதிகளவிலான முதலீடுகளை இட்டு தங்களால் செய்கை பண்ணப்பட்ட பச்சை மிளகாயின் மொத்த விலை குறைவடைந்துள்ளதாகவும் தங்களிடம் மொத்த வியாபாரிகள் 1கிலோ 90 ரூபா முதல் 100 ரூபாவுக்கு பெற்றுச் சென்று அவர்கள் விற்பனை செய்வதாகவும் தாங்கள் செய்கைக்காக இட்ட முதலீடுகளை விலைகுறைவடைந்ததனால் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

களுதாவளை பிரதேசத்தில் அமைந்துள்ள பொருளாதார மத்திய நிலையம் செயற்படாமையே இதற்கான காரணம் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பச்சை மிளகாயை நியாயமான விலைக்கு விற்பனை செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோருகின்றனர்.

# கல்முனை பிரதேச செயலாளரின் இடமாற்றத்தை இரத்துச்செய்க!

## பிரதமரிடம் ஹரீஸ் எம்.பி. கோரிக்கை

(மாளிகைக்காடு செய்தியாளர்)

கல்முனை பிரதேச செயலாளர் ஜெ.லியாக்கத் அலி மண்முனை தென்மேற்கு பிரதேச (பட்டிப்பளை) செயலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதை இரத்துச் செய்யுமாறு பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரும் பிரதமருமான தினேஷ் குணவர்தனவிடம் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த 2021.03.01 முதல் கல்முனை பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்ட ஜெ.லியாக்கத் அலி இரண்டு வருடங்கள் மட்டுமே குறித்த சேவை நிலையத்தில் கடமையாற்றியுள்ள நிலையில், அவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டிருப்பது பொதுமக்கள் மத்தியில் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. இதனை கருத்தில் கொண்டு அவரது இடமாற்றத்தை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஹரீஸ் எம்.பி. பிரதமருக்கான தனது கோரிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

நிர்வாக சேவை தரம் ஒன்றைச் சேர்ந்த லியாக்கத் அலி சிறந்த நிர்வாகியாகவும் தனது பொறுப்புகளை பாரபட்சமின்றி செய்ததன்மூலம் மக்கள் மத்தியில் நற்பெயருடன் இருப்பவர் என்றும் பல்லின சமூகங்கள் வாழும் கல்முனையில் சிறந்த நிர்வாகத்தை வழங்கியவர் என்றும் மேலும் தனது கோரிக்கை கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கல்வியியல் கல்லூரி மாணவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைக்கு தீர்வு

## நீதிக்கான மய்யத்தின் நடவடிக்கைக்கு கல்வியமைச்சு சாதகமான பதில்

(மாளிகைக்காடு செய்தியாளர்)

கல்வியியல் கல்லூரிகளில் கிறிஸ்தவ மற்றும் இஸ்லாம் பாடத்துக்கு மாணவர்களை உள்ளீர்ப்பதில் கிறிஸ்தவ, முஸ்லிம் மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக நீதிக்கான மய்யம் மேற்கொண்ட சட்ட நடவடிக்கையினால் கல்வியமைச்சு தீர்வு வழங்கியுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் நீதிக்கான மய்யம் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் கடந்த பெப்ரவரி மாதம் 08ஆம் திகதி அதன் தலைவர் சட்டத்தரணி ஷஃபி எச்.இஸ்மாயில், செயலாளர் கலாநிதி றியாத் ஏ.மஜீத் ஆகியோர் கையொப்பமிட்டு முறைப்பாடொன்றை பதிவு செய்திருந்தனர்.

அம்முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, கடந்த பல வருடங்களாக கிறிஸ்தவ, இந்து, இஸ்லாம் சமய பாடநெறிகளுக்கு கல்வியியல் கல்லூரிகளுக்கு சமமான எண்ணிக்கை கொண்ட மாணவர்கள் உள்ளீர்க்கப்படுவது வழக்கமாக இருந்து வந்துள்ளது. 2018ஆம் ஆண்டில் தமிழ் மொழிமூலமாக இந்து, கிறிஸ்தவ மற்றும் இஸ்லாம் பாட நெறிகளுக்கு கல்வியியல் கல்லூரிகளில் 30 மாணவர்கள் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டனர்.

2016, 2017ஆம் ஆண்டுகளிலும் மூன்று பாடநெறிகளுக்கு சமமானவர்கள் உள்வாங்கப்பட்டிருந்தனர். 2022ஆம் ஆண்டு கல்வியியல் கல்லூரிகளுக்கு மாணவர்களை உள்வாங்கும்போது இந்து சமய பாடத்துக்கு 40 (2019, 2020) மாணவர்களையும் இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ பாடநெறிகளுக்கு தலா 20 மாணவர்களையும் மாத்திரமே உள்வாங்க இருப்பதாக வர்த்தமானியில் கல்வி அமைச்சு அறிவித்தல் வழங்கியுள்ளது.



இந்த வர்த்தமானியை இரத்துச் செய்து இஸ்லாம், கிறிஸ்தவ பாடநெறிகளுக்கு மாணவர்களை கூடுதலாக உள்வாங்குமாறு மனித உரிமை ஆணைக்குழுவில் நீதிக்கான மய்யம் முறைப்பாடொன்றை பதிவு செய்திருந்தது.

இம்முறைப்பாட்டை ஏற்று இலங்கை மனித உரிமை ஆணைக்குழு மேற்கொண்ட துரித நடவடிக்கை காரணமாக கல்வியமைச்சு குறித்த இரு பாடநெறிகளுக்கும் கூடுதல் மாணவர்களை உள்ளீர்ப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக நீதிக்கான மய்யத்துக்கு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் கல்வியமைச்சு இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவுக்கு வழங்கியுள்ள பதிலில் சமூக நிறுவனங்கள் கல்வியியலாளர்களின் கோரிக்கைக்கு ஏற்ப கல்வியியல் கல்லூரிகளில் இஸ்லாம், கிறிஸ்தவ பாடங்களுக்கான மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவுள்ளது. அதாவது இஸ்லாம் பாடத்துக்கு 60 ஆகவும் கிறிஸ்தவ பாடத்துக்கு 34 ஆகவும் அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

அநீதி இழைக்கப்பட்ட கிறிஸ்தவ, முஸ்லிம் மாணவர்களுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுத்த நீதிக்கான மய்யத்துக்கு கிறிஸ்தவ, முஸ்லிம் மாணவர்கள், கல்வியியலாளர்கள், பொதுமக்கள் நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துள்ளனர்.

நீதிக்கான மய்யம், முஸ்லிம் மாணவர்களிடமிருந்து ஞானசார தேரரின் சிபாரிசின் பேரில் பறிக்கப்பட்ட இஸ்லாம் பாடப் புத்தகத்தை மீளப் பெற்றுக்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
easttamillan@gmail.com

# போடியார் புலம்பல்!



**யாழ்பாணத்தமிழர்கள இனி சைக்கிள் கட்சியால ஏமாற்றமுடியாதாம் எண்டு ரெலோ கட்சில பேச்சாளர் சுரேந்திரன் சொல்லியிருக்காரு எலுவா? அப்ப கிழக்கு தமிழர்களமட்டும்தான் அவங்களால ஏமாற்றுவாங்க எண்டத சொல்லாம சொல்லுறாரு போலஅடே பொடியா ஆரு ஆர ஏமாத்திற எண்டதலெல்லாம் மக்களுக்கு தெரியும்டாம்பி.. நீங்க மட்டும் தமிழர ஏமாற்றாம ரகசியமாக ரணிலிட்ட போய் எதையும் எடுக்கப்பாருங்க**

# இறந்த நிலையில் காட்டு யானை மீட்பு



(கந்தளாய் செய்தியாளர்)

கந்தளாய், வான்எல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கருவலகஸ்வெவ பகுதியில் காட்டு யானை ஒன்று இறந்த நிலையில் மீட்கப்பட்டதாக வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த யானை சூரியபுற பகுதியிலிருந்து ஞாயிற்றுக்கிழமை(07) மாலை கருவலகஸ்வெவ பகுதிக்கு குட்டியும் தாயுமாக வந்ததாக அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், நேற்று திங்கட்கிழமை (08) காலையில் காட்டு யானை இறந்த நிலையில் இருப்பதை கண்ட பொதுமக்கள், கந்தளாய் வனவிலங்கு அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளனர். பின்னர் கந்தளாய் வனவிலங்கு அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டதுடன் குட்டி யானையை தேடும்பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

# 17 வயது இளைஞன் தூக்கிட்டு தற்கொலை

(கந்தளாய் செய்தியாளர்)

திருகோணமலை, உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அலஸ்தோட்டம் பகுதியில் இளைஞர் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை(07) இரவு இடம்பெற்றிருக்கலாம் எனவும் இச்சம்பவத்தில் 17 வயதான வசந்தராஜா நிலுஜன் எனும் இளைஞனே உயிரிழந்துள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இடத்துக்கு திங்கட்கிழமை(08) சென்ற திருகோணமலை நீதிமன்ற நீதிவான் ஸ்தல விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்காக உத்தரவிட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கஞ்சாவுடன் இருவர் கைது

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டாளைச்சேனை பிரதேசத்தில் இருவர் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒருவர் 1050 மில்லிகிராம் கஞ்சாவை விற்பனை செய்தமை மற்றும் 3150 மில்லிகிராமை தன்வசம் வைத்திருந்தமை, மற்றைய நபர் 1050 மில்லிகிராம் கஞ்சாவை தன்வசம் வைத்திருந்தமை ஆகிய குற்றங்களுக்காக பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இச்சந்தேக நபர்கள் கஞ்சா வைத்திருந்தமை தொடர்பாக அக்கரைப்பற்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து உப பொலிஸ் பரிசோதகர் ஹஸீர் தலைமையிலான குழுவினர் குறித்த பிரதேசங்களுக்குச் சென்று சந்தேக நபர்களை கைது செய்து நேற்று திங்கட்கிழமை(08) அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது அவர்களை எதிர்வரும் 18ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சாய்ந்தமருது, மாளிகைக்காடு பிரதேசங்களுக்கான ஸகாத் விநியோகம் தொடர்பில் கலந்துரையாடல்



(மாளிகைக்காடு செய்தியாளர்)

ஸகாத் விநியோகம் தொடர்பான கலந்துரையாடல் சாய்ந்தமருது, மாளிகைக்காடு பைதுஸ் ஸகாத் நிதியத்தின் ஏற்பாட்டில் சாய்ந்த மருது ஜூம்ஆப் பெரிய பள்ளிவாசலில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை(07) இடம்பெற்றது.

சாய்ந்தமருது, மாளிகைக்காடு பைதுஸ் ஸகாத் நிதியத்தின் தலைவர் மௌலவி ஐ.எல்.எம்.றஹ்பியின் நெறிப்படுத்தலில் சாய்ந்த மருது - மாளிகைக்காடு ஜூம்ஆப் பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் ஏ.எம்.ஹிபத்துல் கரீம் தலைமையில்இடம் பெற்ற இக்கலந்துரையாடலில் சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜம்மிய்யதுல் உலமா சபைத் தலைவர் எம்.எம்.சலீம், சாய்ந்தமருது பிரதேச செயலக முன்னாள் பிரதேச செயலாளரும் இலங்கை பொதுச்சேவை ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினருமான ஏ.எல்.எம்.சலீம், சொப்டா கெயா நிறுவனத்தின் தவிசாளர் பொறியியலாளர் எம்.எம்.நஸீர், நியோ மார்க்கட்டிங் தவிசாளர் என்.எம்.றிஸ்மீர், சமுர்த்தி திட்ட முகாமையாளர் றியாத் ஏ.மஜீத், கிராம சேவை உத்தியோகத்தர் எல்.நாஸர் உள்ளிட்ட பைதுஸ் ஸகாத் நிதியத்தின் உறுப்பினர்கள், உலமாக்கள், மரைக்காயர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, இம்முறை ஸகாத் விநியோகத்தை எவ்வாறு மேற்கொள்வது என்பது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. ஸகாத் கோரி விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங் களை முதல் கட்ட நடவடிக்கையாக பள்ளிவாசல் நிர்வாகத்திடம் ஒப்படைத்து தெரிவுகளை மேற்கொள்வது எனவும் அடுத்த கட்டங்களாக கிராம சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடாகவும் அதனையடுத்து சாய்ந்தமருது, மாளிகைக்காடு பைதுஸ் ஸகாத் நிதியத்தின் உறுப்பினர்கள் ஊடாகவும் தெரிவுகளை மேற்கொள்வது என இணக்கம் காணப்பட்டது.

இம்முறை ஸகாத் விநியோகத்தின்போது சுயதொழில், பூர்த்தியாகாத வீடுகளை நிர்மாணிக்க உரியவர்களின் பங்களிப்புடன் உதவுதல், கல்விக்கு உதவுதல் போன்ற விடயங்கள் விரிவாக ஆராயப் பட்டன. மேலும் சாய்ந்தமருது, மாளிகைக்காடு பிரதேசத்தில் வீடற்றோருக்கு சாய்ந்தமருதில் "ஸகாத் கிராமம்" எனும் திட்டத்தினூடாக எதிர்காலத்தில் வீடுகள் நிர்மாணித்துக் கொடுப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

ஸகாத் விநியோகத்தின்போது பயனாளிகளை தெரிவு செய்வது தொடர்பில் சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

# தென்கிழக்கு வங்கக் கடலில் உருவாகிறது புதிய புயல்

## மீன்பிடிக்கச் செல்லவேண்டாம் என மீனவர்களுக்கு எச்சரிக்கை; ஆழ் கடல் மீன்பிடிக்குச் சென்றோர் கரை திரும்புமாறும் அறிவுறுத்து

தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய தெற்கு அந்தமான் கடல் பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ளது. இது விரைவில் 'மொக்கா' புயலாக வலுப்பெறும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்:

தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய தெற்கு அந்தமான் கடல் பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு பகுதி நேற்று (08) உருவாகியுள்ளது. இது இன்று (09) காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று 10ஆம் திகதி தென்கிழக்கு மற்றும் அதனை ஒட்டிய மத்திய கிழக்கு வங்கக் கடல் மற்றும் அந்தமான் கடல் பகுதிகளில் புயலாக மேலும் வலுப்பெறக்கூடும். இது வடக்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து மத்திய கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில்



11ஆம் திகதி நிலவக்கூடும். அதன் பிறகு வடக்கு-வட கிழக்கு திசையில் திரும்பி பங்களாதேஷ் - மியன்மார் கடற்கரை நோக்கி நகரக்கூடும்.

**மீனவர்களுக்கான எச்சரிக்கை**

அந்தமான் கடற்பகுதியில் புயல் வலுப்பெறும் நிலையில் குமரிக் கடல், மன்னார் வளைகுடா பகுதிகள், தமிழக கடலோரப் பகுதிகள், இலங்கையை ஒட்டிய தென் மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோமீற்றர் வேகத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும். தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகள், அந்தமான் நிக்கோபார் தீவுகள் மற்றும் அதனை ஒட்டிய அந்தமான் கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.

ஆகவே, 9,10, 11 மற்றும் 12ஆம் திகதிகளில் மீனவர்கள் மேற்குறிப் பிட்ட பகுதிகளுக்குச் செல்ல வேண்டா மென்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர். ஆழ் கடல் மீன்பிடிக்குச் சென்றோர் கரைக்கு திரும்புமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# மன்னரும் அரச குடும்ப விதிகளும்



உலக செய்திகள்

பிரித்தானிய மன்னர் மூன்றாம் சார்ள்ஸின் முடிசூட்டு விழா லண்டனில் கடந்த சனிக்கிழமை கோலாகலமாக இடம்பெற்றது.

கடந்த 1952ஆம் ஆண்டு 2ஆம் எலிசபெத் தனது 26ஆவது வயதில் பிரித்தானிய ராணியானார். அவருக்கு கடந்த 1953ஆம் ஆண்டு ஜூன் 2ஆம் திகதி முடிசூட்டு விழா இடம்பெற்றது. இந்நிலையில், அவர் வயது மூப்பு மற்றும் உடல்நலக்குறைவால் கடந்த 2022ஆம் ஆண்டு செப்டெம்பர் 8ஆம் திகதி காலமானார்.

இதனையடுத்து அவரது மகனும் இளவரசருமான 3ஆம் சார்ள்ஸ் மன்னரானார். அவருக்கு 2023ஆம் ஆண்டு மே 6ஆம் திகதி பாரம்பரிய முறைப்படி முடிசூட்டு விழா இடம்பெறும் என அறிவிக்கப்பட்டது.

இதன்படி, லண்டனிலுள்ள வெஸ்ட்மின்ஸ்டர் அபே தேவாலயத்தில் சனிக்கிழமை முறைப்படி முடிசூட்டு விழா ஆயிரம் ஆண்டுகால வழக்கப்படி, பாரம்பரிய நடைமுறையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் உலகம் முழுவதிலுமிருந்து 2,200இற்கும் மேற்பட்ட பிரபலங்கள் கலந்து கொண்டனர்.

இந்நிலையில் மன்னரான மூன்றாம் சார்ள்ஸ் அவசியம் கடைப்பிடிக்க வேண்டிய அரச குடும்ப விதிமுறைகள் குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன. அதன்படி,

**பரிசுகளை மறுக்கக் கூடாது:** பிரித்தானிய அரச குடும்ப வழக்கத்தின்படி மன்னர் பரிசுப் பொருட்களை மறுக்கக் கூடாது.

**மகனுடன் பயணம் கூடாது:** மன்னரான மூன்றாம் சார்ள்ஸ் இளவரசர் உடன் ஒன்றாக ஒரே விமானத்தில் பயணிக்கக் கூடாது. மன்னர் தனி விமானத்தில்தான் பயணிக்க வேண்டும்.

**ஆடை விதிமுறைகள்:** அரசர் வெளிநாடுகளுக்குச் செல்லும்போது சில ஆடை விதிகளையும் பின்பற்ற வேண்டும். விதிகளின்படி, அவர்கள் பயணம் செய்யும் நாட்டின் உள்ளூர் பாரம்பரியத்தை அவர்களின் ஆடை பிரதிபலிக்க வேண்டும்.

**செல்பி கூடாது:** மன்னர் மக்களுடன் செல்பி புகைப்படங்கள் எடுக்கக் கூடாது. ஓட்டோகிராஃப் (கையெப்பம்) வழங்கக் கூடாது.

**மட்டி மீன்கள் உண்ணக் கூடாது:** உணவு நச்சுத் தன்மையைத் தவிர்ப்பதற்காக மட்டி மீன்களை அரசர் உட்கொள்ளக் கூடாது. மன்னர் தனது பாதுகாப்பை உறுதிப்படுத்த அந்நியர்களிடமிருந்து உணவையும் ஏற்றுக் கொள்ள முடியாது.

## கேரளா படகு விபத்து: 22 பேர் உயிரிழப்பு



கேரளாவின் மலப்புரம் மாவட்டம், தானூர் கடற்பகுதியில் சுமார் 40 பேருடன் சென்ற சுற்றுலாப் படகொன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 5 குழந்தைகள் உட்பட 22 பேர் உயிரிழந்துள்ளனர். 8 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். காணாமல் போனோரை தேடும் பணிகள் முழுவீச்சில் இடம்பெற்றுவருகின்றன.

## பெரு தங்க சுரங்கத்தில் தீ: 27 பேர் பலி



தென் அமெரிக்க நாடான பெருவில் தங்க சுரங்கத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 27 பேர் உயிரிழந்துள்ளனர்.

அரேக்யூபா நகரில் இயங்கிவந்த லா எஸ்பெரான்சா சுரங்கத்தில் சனிக்கிழமை காலை திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

300 அடி ஆழத்தில் பணியாற்றிய போது மின்கசிவு ஏற்பட்டு தீப்பற்றியதால், தொழிலாளர்கள் உள்ளே சிக்கிக் கொண்டனர். இந்த விபத்தால், சுரங்கம் முழுவதுமாக தீப்பற்றி எரியத் தொடங்கியது.

தகவலறிந்த தீயணைப்பு துறையினர் விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டு, 2 பேரை தீயிலிருந்து மீட்டுள்ளனர்.

## பிரித்தானிய மன்னர் மூன்றாம் சார்ள்ஸுக்கு எதிர்ப்பு தெரிவித்த 52 பேர் அதிரடியாக கைது



பிரித்தானிய மன்னர் மூன்றாம் சார்ள்ஸின் முடிசூட்டு விழாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடத்திய 52 பேரை லண்டன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இங்கிலாந்தை 70 ஆண்டு காலமாக ஆட்சி செய்து வந்த ராணி இரண்டாம் எலிசபெத் கடந்தாண்டு செப்டெம்பர் 8ஆம் திகதி காலமானார். அவரது மகன் 3ஆம் சார்ள்ஸ் பிரித்தானியாவின் புதிய மன்னராக அறிவிக்கப்பட்டார். இந்த அறிவிப்பு வெளியாகி பல மாதங்கள் கடந்த நிலையில், சனிக்கிழமை (06) லண்டன் வெஸ்ட் மின்ஸ்டெர் அபேயில் 3ஆம் சார்ள்ஸின் முடிசூட்டு விழா பிரம்மாண்டமாக இடம்பெற்றது.

இதற்காக லண்டன் நகரமே வண்ணமயமாக அலங்கரிக்கப்பட்டு விழாக்கோலம் பூண்டிருந்தது. ஆனால், மன்னர் சார்ள்ஸின் முடிசூட்டு விழாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் மன்னராட்சி முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் முக்கிய நகரங்களில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. மத்திய லண்டனில் ஊர்வலமாக சென்று ஆர்ப்பாட்டம் நடத்திய மன்னராட்சி எதிர்ப்புக் குழுவின் தலைவர் உட்பட 52 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.போராட்டக்காரர்களின் ஊர்வலம் தொடங்கும் முன்பே, அந்த அமைப்பின் தலைவர் கிரஹாம் ஸ்மித் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார். அதேபோல் லண்டனின் சோஹோ நகரம், ஸ்கொட்லாந்திலுள்ள கிளாஸ்கோ, வேல்ஸ் நகரங்களிலும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. முன்னதாக கடந்த மாதம் நடத்திய கருத்துக் கணிப்பில் பிரித்தானியாவில் 64% பேர் மன்னரின் முடிசூட்டு விழாவில் தங்களுக்கு ஆர்வம் இல்லை என்று தெரிவித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வரலாறு படைத்த பாண்டியா சகோதரர்கள்



ஐ.பி.எல். வரலாற்றில் இரண்டு எதிரணிகளுக்கு தலைவர்களாக இருந்த முதலாவது சகோதரர்கள் என்ற வரலாற்றுச் சாதனையை பாண்டியா சகோதரர்கள் படைத்தனர். நேற்று முன்தினம் அஹமதாபாத்தில் இடம்பெற்ற குஜராத் டைட்டன்ஸ் - லக்னோ சுப்பர் ஜெயன்ட்ஸ் அணிகளுக்கு இடையிலான போட்டியிலேயே பாண்டியா சகோதரர்கள் இந்த வரலாற்றுச் சாதனையைப் படைத்தனர்.

இரண்டு அணிகளுக்கு நாங்கள் இருவரும் அணித் தலைவர்களாக விளையாடுவதானது கனவு நனவானது போல இருக்கிறது. எவ்வாறாயினும் களத்துக்குள் நுழைந்துவிட்டால் போட்டித்தன்மை இருக்கவே செய்யும் என லக்னோ சுப்பர் ஜெயன்ட்ஸ் அணித்தலைவர் க்ருணல் பாண்டியா தெரிவித்தார்.

இதேவேளை எங்கள் குடும்பத்துக்கு இந்த நாள் மிகப் பெரிய உணர்ச்சிகரமான நாளாகும். எங்களது தந்தை பெருமைப்பட்டிருப்பார். இது முதல் தடவையாக இடம்பெறும் ஒரு விடயமாகும். விபரிப்பதற்கு வார்த்தைகள் வரவில்லை. ஆனால், எங்கள் குடும்பம் பெருமையடைகிறது. இந்தப் போட்டியில் ஒரு பாண்டியா வெற்றிபெறுவார் என ஹார்திக் பாண்டியா கூறினார்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

TATA IPL
**இன்றைய போட்டி**
போட்டி இல - 54
மும்பை எதிர் பெங்களூர்
நேரம் - இரவு 7.30
இடம் - மும்பை

### கடைசிப் பந்தில் நடந்த ட்விஸ்ட்

## ராஜஸ்தானுக்கு அதிர்ச்சி தோல்வி




ஜெய்ப்பூரில் நேற்று முன்தினம் நடந்த ஐ.பி.எல். போட்டியில் சன்சைஸ் ஹைதராபாத் அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் த்ரில் வெற்றிபெற்றது.

நாணய சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 20 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 214 ஓட்டங்கள் குவித்தது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத் அணிக்கு கடைசி ஓவரில் 17 ஓட்டங்கள் தேவைப்பட்டது. சந்தீப் சர்மா வீசிய அந்த ஓவரை எதிர்கொண்ட அப்துல் சமாத் முதல் பந்தில் 2 ஓட்டங்கள் எடுத்தார். இரண்டாவது பந்தை அவர் சிக்ஸருக்கு விளாச ஆட்டத்தில் பரபரப்பு தொற்றிக் கொண்டது. அடுத்தடுத்த பந்துகளில் ஹைதராபாத் அணிக்கு 2,1,1 என ஓட்டங்கள் வந்தது. கடைசி பந்தில் 5 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் சமாத் அடித்த பந்து கேட்ச் ஆனது. ஆனால் அது நோ பால் எனக் கூறி களநடுவர் ட்விஸ்ட் கொடுத்தார். பின்னர் மீண்டும் கடைசி பந்தை சந்தீப் வீசியபோது சமாத் அதனை சிக்ஸராக மாற்ற ஹைதராபாத் அணி மிரட்டலாக வெற்றி பெற்றது.

## ஆறுதல் வெற்றி பெற்ற நியூசிலாந்து

### தோல்வியால் தரவரிசையின் முதலிடத்தை இழந்தது பாகிஸ்தான்




பாகிஸ்தான் அணியுடனான 5வதும் இறுதியுமான ஒருநாள் ஆட்டத்தில் நியூசிலாந்து அணி 47 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வீழ்த்தி ஆறுதல் வெற்றி பெற்றது. நேற்று முன்தினம் கராச்சியில் இடம்பெற்ற ஆட்டத்தில் நியூசிலாந்து அணி 49.3 ஓவர்களில் அனைத்து விக்கட்டுக்களையும் இழந்து 299 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு களமிறங்கிய பாகிஸ்தான் அணி 46.1 ஓவர்களில் அனைத்து விக்கட்டுக்களையும் இழந்து 252 ஓட்டங்களைப் பெற்றது. இறுதிவரை களத்தில் நின்ற இஃப்திகார் அஹமட் 94 ஓட்டங்கள் எடுத்தார். ஏற்கனவே தொடரை இழந்திருந்த நியூசிலாந்து அணி இந்த வெற்றியின் மூலம் வெள்ளையடிப்பிலிருந்து தப்பியது. பாகிஸ்தான் அணி 4-1 என்ற கணக்கில் தொடரை வென்றது. ஷிப்லே ஆட்டநாயகன் விருதும் பஹ்கர் ஜமான் தொடர் நாயகன் விருதும் வென்றனர். இதேவேளை நான்காவது ஒருநாள் ஆட்டத்தில் வெற்றியீட்டியதன் மூலம் ஐ.சி.சி. ஒருநாள் தரவரிசையில் முதலிடத்துக்கு முன்னேறிய பாகிஸ்தான் அணி ஐந்தாவது ஆட்டத்தில் தோல்வியை தழுவ முதலிடத்தை இழந்து மூன்றாமிடத்துக்கு பின்தள்ளப்பட்டது.

## கல்முனை பஹ்ரியாவின் பவளவிழா விளையாட்டுப் போட்டிகள்



**(நூருல் ஹுதா உமர்)**

கல்முனை அல்-பஹ்ரியா மகா வித்தியாலயத்தின் பவளவிழாவை முன்னிட்டு பாடசாலை சமூகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட விளையாட்டுப் பெருவிழா கடந்த வெள்ளிக்கிழமை மாலை அதிபர் எம்.எஸ்.பைசால் தலைமையில் பாடசாலை மைதானத்தில் ஆரம்பமானது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும் இப்பாடசாலை பழைய மாணவருமான கலாநிதி எம்.சி. அலிவூட்டோ , கௌரவ அதிதியாக சம்மாந்துறை வலயக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.றியால், பாடசாலையின் பிரதி அதிபர்களான எம்.ஏ. அஸ்தர், எம்.ஏ. சலாம், உதவி அதிபர் ஐ.றினோஸ், ஆசிரியர் ஏ.எல். பஸ்மின், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு செயலாளர் எஸ்.எல். ஹமீட், பழைய மாணவர் சங்கச் செயலாளர் எம்.ஐ.எம். ஜிப்ரி உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

பாடசாலையின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இவ்வருடம் முழுவதுமாக இரத்த தான முகாம்கள், பழைய மாணவர்களின் அணிகள் பங்குகொள்ளும் கிரிக்கட் சுற்றுப்போட்டி, உதைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், கலை, கலாசார நிகழ்வுகள், சாதனையாளர்கள் கௌரவிப்பு, பரிசளிப்பு, மேலங்கி அறிமுகம் மற்றும் பெண் பழைய மாணவிகளின் நிகழ்வுகள் என பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.




**மருதமுனை ஈஸ்டன் யூத் விளையாட்டுக் கழகத்துக்கு விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கும் நிகழ்வு கழகத்தின் தலைவர் எம்.எச்.எம்.றிஸ்வி தலைமையில் கடந்த சனிக்கிழமை மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதான கேட்போர் கூட மண்டபத்தில் இடம்பெற்றது. விளையாட்டு கழகத்தின் ஆரம்பகால அபிமானியும் தொழிலதிபருமான எம்.ரி. அஜ்மல் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு விளையாட்டு கழகத்திற்கு தேவையான உபகரணங்களை கையளித்தார்.**

**(படம் - ஏ.எல்.எம் ஷினாஸ்)**

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7